වාර්ෂික වාර්තාව

வருடாந்த அறிக்கை

Annual Report

2020



ශ්‍රී ලංකා සංවර්ධන පරිපාලන ආයතනය

இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகம்

Sri Lanka Institute of Development Administration

2020

வருடாந்த அறிக்கை

இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகம்



வருடாந்த அறிக்கை - 2020

வெளியீடு
இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகம்

மே: 28/10, மலலசேகர மாவத்தை, கொழும்பு 07, இலங்கை.
+94 112 697 934 | info@mos.gov.lk

Printed with VOC free, non toxic vegetable oil-based environmentally-friendly ink, on 100% recycled paper using wood free pulp which is made from 100% post consumer waste paper (Paper recycling is the process of recovering waste paper and remarking it into new paper products.)

Recycling one ton of paper saves17 mature trees, 26 m3 of water, 2.3 m3 of disposal space, 320 liters of oil, and 4,100 kilowatt-hours of electricity.

We encourage you to recycle this Document after use.

Printec Establishment Pvt.Ltd



எம்மைப் பற்றி

இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகம் (இ.அ.நி.நி) பொது நிருவாகத்திலும் முகாமைத்துவத்திலும் உத்தியோகத்தர்களின் அறிவையும் திறன்களையும் மேம்படுத்துகின்ற இலங்கையின் முதலான பொதுச்சேவைக்குரிய பயிற்சி நிறுவகமாகும்.

இவ் முகாமைத்துவ பயிற்சிகளுக்கு மேலதிகமாக, நிறுவகத்தினது இலக்குகளாக முகாமைத்துவ ஆலோசனைகளையும், முகாமைத்துவ ஆராய்ச்சிகளையும் தொடர்பான சேவைகளையும் வழங்குவதுடன் நிறுவனங்களின் முகாமைத்துவ முறைகளை மீளமைக்கவும் உதவுகின்றது. இவ் நிறுவனமானது 1982ம் ஆண்டு 9ம் இலக்க பாராளுமன்ற சட்டத்தின் பிரகாரம் நிறுவப்பட்டது.



உள்ளடக்கம்

1. சிறந்த எதிர்காலத்திற்காக அரச துறையை வலுவூட்டல் 6
நோக்கு 6
செயற்பணி 6
மூலோபாய இலக்குகள் 7
பிரதான தொழிற்பாடுகள் 7
எமது பெறுமானங்கள் 7
மூலோபாய நோக்கம் 7
அரச சேவைகள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு செயலாளரின் செய்தி 8

பணிப்பாளர் நாயகத்தின் செய்தி **9**

2. நிதியியல் தொடர்பான முக்கிய விடயங்கள் 12

3. ஆளும் பேரவையின் உறுப்பினர்கள் 18

4. சிரேஸ்ட முகாமைத்துவம் மற்றும் விரிவுரையாளர் குழாம் 19

5. தொழிற்பாட்டு ரீதியான மற்றும் நிறுவனக் கட்டமைப்பு 26
5.1 இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகம் 26
5.2 இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகத்தின் நிறுவனக் கட்டமைப்பு 27

6. பணிப்பாளர் நாயகத்தின் மீளாய்வு 28
கற்றல் மற்றும் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் - 2020 28
6.1 கட்டாய பயிற்சி நிகழ்ச்சிகள் 28
6.2 அனைத்து நாடளாவிய சேவைகளுக்கான கட்டாயக் கற்றல் மற்றும் அபிவிருத்தி நிகழ்ச்சிகள் 29
6.3 திறன் விருத்தி நிகழ்ச்சிகள் - இலங்கை விஞ்ஞான சேவைகள் மற்றும் கட்டிடக் கலையியற் சேவை தரம் I, II ரூ III 29
6.4 டிப்ளோமா நிகழ்ச்சித்திட்டங்கள் 30
6.5 தனிப்பட்ட பயிற்சி நிகழ்ச்சிகள் 30
6.6 முகாமைத்துவ ஆலோசனைகள் 31



7. பட்டப்பின் படிப்பு கற்கைகள் கல்லூரி 32

8. 2020 ஆம் ஆண்டு நடாத்தப்பட்ட விரிவுரைகள் 34

9. தகவல் தொழில்நுட்ப நிலையம் 36

10. மொழிக் கற்கைகள் நிலையம் 39

11. பொது நிர்வாகம் 40
11.1 பணிக்குழு முகாமைத்துவம் 40
11.2 மனிதவள முகாமைத்துவம் 40
11.3. ஏற்பாட்டியல் முகாமைத்துவம் 41

12. கலாநிதி. எச். எஸ். வனசிங்க நூலகம் - இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகம் 43

13. 2020 ஆம் ஆண்டின் இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகத்தின் விசேட நிகழ்வுகள் 45

I. கெதன ரடக் வடென கசக் - 2020 சனவரி 01 ஆம் திகதி 45
II. அரச விரிவுரைகள் 45
III. "தனியார் துறை சிறப்பு செயற்பாடுகள்: அரச துறைக்கான கற்பித்தல்கள்" பற்றிய சிறப்பு விரிவுரை 45
IV. இலங்கை திட்டமிடல் சேவை உத்தியோகத்தர்கள் தமது புதிய நியமனங்களைப் பெற்றனர் 46
V. கொவிட் 19 தொற்று நோய் காலப்பகுதியில் அரச துறை முகாமையாளரின் வகிபங்கு பற்றிய வெப்பினார் 47
VI. நோய்த்தொற்று சகாப்தத்தில் தடையற்ற சேவைகளுக்கான ஏற்பாடு 48
VII. இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகத்தின் பணிப்பாளர் நாயகப் பதவி 50
VIII. "நாட்டிற்காகச் சேவையாற்றும் கலாசாரம்" பற்றிய சிறப்பு விரிவுரை 51
IX. இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகத்தின் பசுமைத் தோட்டத்தில் மூலிகை மருத்துவச் செடிகளை நடுவதற்கு "சுவ தரணி" எனும் தேசிய நிகழ்ச்சித்திட்டமொன்றில் இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகம் இணைந்திருந்தது 51

14. கணக்காய்வுக் குழுவின் அறிக்கை 52

1. சிறந்த எதிர்காலத்திற்காக அரச துறையை வலுவூட்டல்

அரச நிருவாக விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சின் கீழ் கூட்டிணைக்கப்பட்ட அமைப்பொன்றான இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகம் (SLIDA) 1982 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்கச் சட்டத்தின் மூலம் 1982 ஆம் ஆண்டு மே மாதம் ஸ்தாபிக்கப்பட்டது. இது அரச துறை நிர்வாகிகளின் திறனை மேம்படுத்துதல் மற்றும் தொழில்வாண்மை அபிவிருத்தி ஆகியவற்றுக்கான பொறுப்பு உரித்தளிக்கப்பட்ட முன்னணித் தேசிய நிறுவகமாகும்.

இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகம் அரச துறை உத்தியோகத்தர்களுக்கான பயிற்சி வழங்குதல், அரச துறை நிறுவனங்களுக்கான முகாமைத்துவ ஆலோசனை வழங்குதல் மற்றும் அரச துறை உத்தியோகத்தர்கள் மத்தியில் ஆய்வுகளுக்கு ஊக்கமளித்தல் ஆகியவற்றை அரச நலனுடனான தனது மதிப்புமிகு பணியில் பிரதான தொழிற்பாட்டுப் பகுதிகளாகக் கொண்டுள்ளது.

இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகத்திற்கு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் முதுமானி மட்டப் பட்டங்களை வழங்குகின்ற அந்தஸ்தும் வழங்கப்பட்டுள்ளது. இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகத்தின் பட்டப்பின் படிப்பு கற்கைகள் பகுதியில் அரச முகாமைத்துவத்தில் முதுமானி மற்றும் அரச முகாமைத்துவத்தில் பட்டப்பின் டிப்ளோமா ஆகிய கற்கைநெறிகள் வழங்கப்படுகின்றன. அமைச்சுக்களின் செயலாளர்கள், பிரதான நிறைவேற்று அலுவலகர்கள் மற்றும் ஏனைய தரப்பினர்களையும் ஒன்றாக இணைத்து தங்களது முகாமையாளர்களிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட பெறுமானங்களைக் கொண்டு பங்களிப்பினை வேண்டி நிற்கும் நிலைமை விருத்தியடையச் செய்யும் பின்னணியில் தற்காலத்தில் வேகமாக மாற்றமுறும் மற்றும் சவாலாக அமைந்துள்ள அரசாங்க முகாமைத்துவ சூழலின் தேவைகளை நிறைவேற்றும் நோக்கத்தில் இது அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

அரச நிர்வாக விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரின் முழுமையான வழிகாட்டலிற்கு உட்பட்டதாக இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகத்தின் ஆளும் பேரவை இந் நிறுவகத்தின் கொள்கைகள் பற்றிய தீர்மானத்திற்குப் பொறுப்பாகவிருக்கும்.

லண்டன் சிவில் சேவைக் கல்லூரி, சிங்கப்பூர் சிவில் சேவைக் கல்லூரி, சீனாவின் பீஜிங் வெளிநாட்டுக் கற்கைகளுக்கான பல்கலைக் கழகம், இந்தியாவின் நிருவாகம் தொடர்பான லால் பஹதூர் சாஸ்திரி தேசிய அகடமி, அவுஸ்திரேலியாவின் மொனாஸ் பல்கலைக்கழகம், மாலைதீவின் சிவில் சேவைப் பயிற்சி நிறுவனம், சீனாவின் விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பம் தொடர்பான ஹுஜோங் பல்கலைக்கழகம் போன்ற பயிற்சி மற்றும் ஆய்வில் ஒன்றிணைந்து செயற்படுகின்ற பல்வேறு வெளிநாட்டுப் பல்கலைக்கழகங்கள் மற்றும் பயிற்சி நிறுவனங்களுடன் இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகம் வலையமைப்பினைக் கொண்டுள்ளது. 2018 ஆம் ஆண்டு காலப்பகுதியில் இருபக்க பயிற்சி மற்றும் ஆய்வுக் கூட்டுறவினை மேம்படுத்துவதற்குப் பின்வரும் நிறுவனங்களுடன் இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகம் புரிந்துணர்வு உடன்படிக்கையினை மேற்கொண்டுள்ளது.

- பாக்கிஸ்தான் இஸ்லாமியக் குடியரசு அரசாங்கத்தின் அரச கொள்கைகள் பற்றிய தேசிய பாடசாலை
- அரச தொழில் முயற்சிகளின் நிறுவகம், ஹைதராபாத், இந்தியா

கடந்த 38 ஆண்டுகளுக்கு மேலாக இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகம் அறிவினை மேம்படுத்தல், மற்றும் திறனை மேம்படுத்தல், நிறுவன அபிவிருத்தி மற்றும் ஆய்வுகளை நடாத்துதல் ஆகியன உள்ளடங்கலான சேவைகளை முழுமையாகப் பட்டியலிட்டு வழங்குகின்ற பலம்வாய்ந்த நிறுவனமொன்றாக வருமளவிற்கு இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகம் வளர்ச்சிகண்டுள்ளது.



மூலோபாய இலக்குகள்

- வினைத்திறன் மிக்க மற்றும் உற்பத்தித்திறன் வாய்ந்த அரச சேவையினை உருவாக்கும் வகையில் தேசிய அபிவிருத்திக்கான இலக்கிற்கு பங்களிப்பினை வழங்குதல்
- தேசிய மட்டத்திலான கொள்கை அபிவிருத்திக்கு பங்களிப்புச் செய்யும் வகையில் முன்னணி வகிபாகத்தினை வகித்தல்
- இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகம் அதன் கற்றல் மற்றும் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களுக்கான அதிக கேள்வியினை உருவாக்கும் வகையில் அதன் பங்காளர்களின் மனதில் அதற்கான நேர்மறையான உருவினைத் தோற்றுவித்தல்
- தெற்கு மற்றும் தென்கிழக்கு ஆசியாவில் அரச நிருவாக மற்றும் முகாமைத்துவ அபிவிருத்திக்கான ஒன்றிணைந்த நிலையமாக இருப்பதற்கு மாறுதல்.

பிரதான தொழிற்பாடுகள்

- கற்பித்தல் மற்றும் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தினூடாக அரச துறை முகாமைத்துவ ஊழியர்களின் திறன்களைக் கட்டியெழுப்புதல்
- பட்டப்பின் படிப்புப் பட்ட நிகழ்ச்சித்திட்டத்தினூடாக அரச துறை உத்தியோகத்தர்களின் அறிவினை விருத்தி செய்தல்
- அரச கொள்கை மற்றும் முகாமைத்துவம் தொடர்பான ஆய்வுக் கற்கைகளை முன்னெடுக்கும் நோக்கத்தில் வகைக்குறிப்பொன்றினை விருத்திசெய்தல்
- அரச துறை நிறுவனங்கள் மற்றும் அரசிற்குச் சொந்தமான தொழில்முயற்சிகளின் விளைதிறன் மற்றும் வினைத்திறன் விருத்திக்கு நிறுவன அபிவிருத்தி சேவைகளை நடாத்துதல்
- அரச துறைக்கான வினைத்திறன் தகுதிகாண் மற்றும் மொழிப் பரீட்சைகளை நடாத்துதல்





"இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகம் கொவிட் துரதிஸ்டத்தின் மத்தியிலும் அதன் பசுமைத் தோட்டத்தில் மூலிகை நடுகையினை ஆரம்பித்ததன் மூலம் அதன் சமுக மற்றும் சூழற் கடப்பாடுகளை மறந்திருக்கவில்லை."

அரச சேவைகள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு செயலாளரின் செய்தி
ஆளும் பேரவைத் தலைவர் - இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகம்

இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகத்தின் 2020 ஆம் ஆண்டிற்கான வருடாந்த அறிக்கைக்கு இச் சிறிய செய்தியை அனுப்புவதில் பெருமகிழ்ச்சியடைகிறேன். கொவிட் 19 எதிர்பாரா தொற்றுநோயின் காரணமாக இந் நாட்டின் அனைத்துத் துறைகளினாலும் எதிர்கொள்ளப்பட்ட சவால்கள் இவ் வருடத்திலும் தொடர்ந்துகொண்டிருக்கின்றது.

திறன் அபிவிருத்தி, முகாமைத்துவ ஆலோசனைகள், ஆய்வு மற்றும் அபிவிருத்தி அத்துடன் இன்னும் பல உள்ளடங்கலான பயிற்சி மற்றும் அபிவிருத்தி இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகத்தின் பிரதான கவனமாகும். மேற்படி சவால்களின் காரணமாக இந் நிகழ்ச்சித்திட்டத்தின் வேகம் பாதிக்கப்பட்டுள்ளது.

எவ்வாறாயினும், மேற்படி சவால்களுக்கு மத்தியில் இச் சகாப்தத்தில் இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகத்தினால் சில தெளிவான பெறுபேறுகள் எட்டப்பட்ட இயன்றதை எண்ணி நான் மகிழ்ச்சியடைகின்றேன். அறிமுகப் பயிற்சி ஒன்று (01), ஆரம்பிக்கப்பட்ட பதின்நான்கு (14) நிகழ்ச்சித்திட்டங்களில் கட்டாய பயிற்சிகள் ஐந்து (05), உள்வாரி மற்றும் வெளிவாரிப் பயிற்சிகள் பதின்நான்கு (14) நடாத்த இயன்றுள்ளது.

இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகம் கொவிட் 19 நிலைமையினைக் கருத்திற்கொண்டு நாடளாவிய ரீதியில் அரச துறை உத்தியோகத்தர்களுக்கு உதவும் பொருட்டு நிகழ்நிலை பயிற்சி முறை மற்றும் செயற்பாடுகளை ஆரம்பித்துள்ளமையும் வெகுவாகப் பாராட்டத்தக்கதாகும். அரச உத்தியோகத்தர்களுக்கு அறிவினை வழங்கி இந் நாட்டின் சமுக மற்றும் பொருளாதார அபிவிருத்திக்கு உதவுவதற்கு எண்ணற்ற விரிவுரையாளர்கள் ஒழுங்குபடுத்தப்பட்டிருந்தனர்.

இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகம் கொவிட் துரதிஸ்டத்தின் மத்தியிலும் அதன் பசுமைத் தோட்டத்தில் மூலிகை நடுகையினை ஆரம்பித்ததன் மூலம் அதன் சமுக மற்றும் சூழற் கடப்பாடுகளை மறந்திருக்கவில்லை. இந் நிறுவகம் அறுபத்தி இரண்டு (62) பணியாளர்களுக்கான பதவிவெற்றிடத்துடன் இவ் அனைத்துச் செயற்பாடுகளையும் முன்னெடுத்துள்ளமையும் இங்கே குறிப்பிடத்தக்கதாகும். மேற்படி இலக்குகளை அடையுமளவிற்கு பெறுமதிமிகு வழிகாட்டலையும் ஆலோசனையினையும் வழங்கியமைக்காக கௌரவ அமைச்சர் அவர்களுக்கும் இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகத்தின் ஆளும் பேரவைக்கும் எனது மனப்பூர்வமான நன்றியினை இத் தருணத்தில் தெரிவித்துக்கொள்கின்றேன். இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகத்தின் அனைத்து உத்தியோகத்தர்களுக்கும் எனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

ஜே.ஜே. ரத்தினசிறி
செயலாளர்
அரச சேவைகள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு

"தற்போது, இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகத்தின் பரீட்சைகள் பிரிவின் ஊடாக அரச மற்றும் அரசுசார் நிறுவனங்களில் தெரிவு செய்யப்பட்ட பரீட்சைகளை நடத்துவதற்கு அமைச்சரவையின் அங்கீகாரம் எமது நிறுவனத்திற்கு வழங்கப்பட்டுள்ளது."



பணிப்பாளர் நாயகத்தின் செய்தி

உலகளாவிய தொற்றுநோய் நெருக்கடிக்கு மிக்கதும், 21 ஆம் நூற்றாண்டின் இரண்டாம் தசாப்தத்தின் இறுதியுமான, 2020 ஆம் ஆண்டிற்குரிய, இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகத்தின் வருடாந்த அறிக்கையில் இந்தச் செய்தியைச் சேர்ப்பதற்கான வாய்ப்பு கிடைத்தையிட்டு நான் பெரிதும் மகிழ்கிறேன்.

இவ்வருடம், இந்நாட்டு மக்களுடன் இணைந்து அரச உத்தியோகத்தர்களும் எவராலும் கட்டுப்படுத்தப்பட முடியாத பல சவால்களுக்கு முகம் கொடுக்க வேண்டி ஏற்பட்டது. இவற்றுள், கொவிட் 19 தொற்றினால், இலங்கையின் மனித வள மேம்பாட்டில் ஏற்பட்ட தாக்கமும் அடங்கும்.

மேற்கூறிய சவால்கள் இருந்தபோதிலும், இந்த ஆண்டு புதிய உத்தியோகத்தர்களுக்கான சேவை ஆரம்ப பயிற்சித் திட்டங்களையும், நாடளாவிய சேவைகளைச் சேர்ந்த உத்தியோகத்தர்களுக்கான பல கட்டாய திறன் மேம்பாட்டுத் திட்டங்களையும் நடைமுறைப் படுத்த முடிந்தது. மேலும், ஐந்து டிப்ளோமா திட்டங்களை செயல்படுத்துவதற்கு நாங்கள் பணிக்கப்பட்டோம். இதுவரை அரசாங்க நிறுவனங்களின் கோரிக்கைகளுக்கு இணங்க இலக்குசார் பயிற்சி திட்டங்களின் மூலம் 411 பேருக்கு பயிற்சியளிக்கும் வாய்ப்பையும் இந்த ஆண்டு பெற்றுள்ளோம்.

தற்போது, இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகத்தின் பரீட்சைகள் பிரிவின் ஊடாக அரச மற்றும் அரசுசார் நிறுவனங்களில் தெரிவு செய்யப்பட்ட பரீட்சைகளை நடத்துவதற்கு அமைச்சரவையின் அங்கீகாரம் எமது நிறுவனத்திற்கு வழங்கப்பட்டுள்ளது.

அத்துடன் முகாமைத்துவ ஆலோசனை மற்றும் முதுகலைமானிப் படிப்புகள் மூலம் பொது சேவையின் திறன் மேம்பாட்டிற்கு அதிகபட்ச பங்களிப்பை வழங்குவதற்கான வாய்ப்பு எங்களுக்கு கிடைத்து உள்ளது.


இலங்கையின் பொதுச் சேவையில் பயிற்சித் தேவைகளைப் பூர்த்தி செய்ய இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவனம் முதன்முதலில் ஆன்லைன் முறையைப் பயன்படுத்தியது. இந்தச் சந்தர்ப்பத்தை ஒரு வாய்ப்பாகப் பயன்படுத்தி, இந்த பொறிமுறையின் மூலம் எங்கள் நிறுவனத்தில் இந்த ஆண்டு முதுகலை படிப்புகள் தொடர்பான அனைத்து கல்வி நடவடிக்கைகளையும் நாங்கள் ஆன்லைனில் உள்ளடக்கியுள்ளோம்.

அரச சேவையின் பயிற்சித் திட்டங்களை புதிய திசையில் கொண்டு செல்வதற்கு இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவனம் மேற்கொண்ட அனைத்து முயற்சிகளையும் நான் அன்புடன் நினைவுகூர விரும்புகிறேன். மேலும் எமது அர்ப்பணிப்புள்ள ஊழியர்களின் ஆதரவு, அர்ப்பணிப்புடன் கூடிய குழுப் பணியினால் எமது வெற்றி யை எட்டியுள்ளதாக நான் நம்புகிறேன்.

இந்த சாதனைகள் அனைத்தையும் அடைவதற்கு காரணமான வழிகாட்டுதல்கள் மற்றும் தாராளமான ஊக்குவிப்புகளுக்காக இலங்கையின் அபிவிருத்தி நிருவாக நிறுவகத்தின் ஆளுநர் சபைக்கு எமது நிறுவனத்தின் சார்பாக எனது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கலாநிதி பிரதீபா சேரசிங்க
பணிப்பாளர் நாயகம்
இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவனம்





கட்டமைப்பு

குறித்த பாடவிதானங்களில் விசேஷ நிபுணத்துவம் பெற்றவர்கள் பயிற்சித் திட்டங்களை நடைமுறைப்படுத்தவும், முகாமைத்துவ ஆலோசனைகளை வழங்கவும் ஆராய்ச்சிப் படிப்புக்களுக்குமாக குறிப்பிடப்பட்ட நிலையங்களில் குறித்த துறைத் தலைவர்களின் கீழ் இணைக்கப்படுவார்கள். இவர்கள் குறிப்பிட்ட பணிகளை மேற்கொள்வதற்காக தொடர்பான நிலையங்களிலிருந்து தெரிவு செய்யப்படுவார்கள். இவற்றிற்கு மேலதிகமான தேவையேற்படின் குறித்த பாடப்பரப்புகளில் தொழிற்றுறை அனுபவம் மற்றும் திறன் மிக்க வெளிவாரி நிபுணர்களின் சேவைகள் பெற்றுகொள்ளப்படும்.

2. நிதியியல் தொடர்பான முக்கிய விடயங்கள்

இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகம்
நிதியியல் நிலைமைக் கூற்று 2020 திசம்பர் 31 இல் உள்ளவாறானது

	குறிப்புகள்	2020 ரூபா.சதம்	2029 ரூபா.சதம்
சொத்துக்கள்			
நடைமுறைச் சொத்துக்கள்			
வங்கி மீதிகள்	03	24,462,465.87	22,918,072.02
3 மாத வைப்புக்கள்	04	320,652,293.25	302,291,319.34
பெறுவனவுகள்	05	46,843,764.05	22,058,329.11
கையிருப்புகள்	06	5,537,033.28	5,861,336.98
முற்பணக் கொடுப்பனவுகள்	07	4,059,589.00	3,480,761.33
முற்பணங்கள்	08	69,802.00	293,340.64
ஊழியர் கடன்கள்	09	14,151,150.57	16,059,835.13
		415,776,098.02	**372,962,994.55**
நடைமுறையில்லாச் சொத்துக்கள்			
ஆதனம், பொறி மற்றும் உபணைம்	10	439,323,810.99	421,105,571.58
குறை வேலை (மூலதனம்)		-	1,644,343.69
பணிக்கொடை நிதி முதலீடு	11	40,776,844.34	38,081,659.54
வைப்புக் கணக்கு	12	1,299,500.00	1,299,500.00
		481,400,155.33	**462,131,074.81**
மொத்தச் சொத்துக்கள்		**897,176,253.35**	**835,094,069.36**
பொறுப்புக்கள்			
நடைமுறைப் பொறுப்புக்கள்			
செலுத்தவேண்டிய வைப்புக்கள்	13	20,441,324.41	21,812,011.68
முற்பணப் பற்றுச்சீட்டுகள்	14	106,561,290.03	105,846,522.47
சென்மதிச் செலவுகள்	15	4,480,123.73	3,115,638.71
நிச்சயமற்ற பெறுவனவுகளுக்கான ஏற்பாடுகள்		7,532,692.96	4,322,607.91
		139,015,431.13	**135,096,780.77**
நடைமுறையில்லாப் பொறுப்புகள்			
வரையறுக்கப்பட்ட தொலைக்கல்வி நிலையம்	16	19,860,707.06	21,515,765.39
பணிக்கொடைக்கான ஏற்பாடுகள்	17	34,741,715.00	32,939,816.50
		54,602,422.06	**54,455,581.89**
மொத்தப் பொறுப்புக்கள்		**193,617,853.19**	**189,552,362.66**
தேறிய சொத்துக்கள்		**703,558,400.16**	**645,541,706.70**
தேறிய சொத்துக்கள் / உரிமையாண்மை			
பிற்போடப்பட்ட வருமானம் – திறைசேரி பணிக்கொடை		544,802,377.59	564,544,388.88
ஏனைய ஒதுக்கங்கள்- சொத்துக்கள் மீள்மதிப்பீட்டு ஒதுக்கங்கள்	18	58,615,807.00	12,015,807.00
திரண்ட மிகை / பற்றாக்குறை	19	100,140,215.57	68,981,510.82
மொத்த தேறிய சொத்துக்கள் / உரிமையாண்மை		**703,558,400.16**	**645,541,706.70**

இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகம்
2020 திசம்பர் 31ஆம் திகதி முடிடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றுகைக் கூற்று

	குறிப்பு	2020 ரூபா.சதம்	2019 ரூபா.சதம்
வருமானங்கள்			
திறைசேரியின் பங்களிப்பு	20	137,642,011.29	168,977,849.95
ஏனைய வருமானங்கள்			
பாடநெறிக் கட்டணம்	21	500.00	155,740.00
மண்டப வாடகை		14,759,696.02	21,975,030.00
வெளியீடுகள் விற்பனை		57,190.00	98,932.00
முதலீடுகள் மீதான வருமானங்கள்	22	23,512,978.80	31,718,528.53
கடன் வட்டி		545,298.98	664,924.88
வாடகை	23	7,971,788.51	13,658,393.83
குத்தகை கூலி		1,655,058.33	1,655,058.33
பட்டப் பின் படிப்பு கல்லூரி		18,712,003.71	9,945,276.58
மொழி நிகழ்ச்சித் திட்டங்கள்		3,562,360.00	1,162,445.75
ஆலோனைச் சேவைகள்	24	14,032,754.44	51,648,093.20
நிறுவன ரீதியான பங்கு வருமானம்		8,436,678.45	10,356,757.41
நானாவித வருமானம்	25	11,504,728.53	16,113,053.31
மொத்த வருமானங்கள்		**242,393,047.06**	**328,130,083.77**
செலவினங்கள்			
ஆளுக்குரிய வேதனாதிகள்	26	112,686,048.16	108,954,116.89
ஊழியர் நலன்புரி	27	3,317,128.95	4,136,515.72
பிரயானச் செலவுகள் மற்றும் கொடுப்பனவுகள்	28	356,566.10	1,099,719.02
உபயோக மற்றும் கொடுப்பனவுகள்	29	27,817,214.60	34,919,536.08
போக்குவரத்து	30	3,633,601.56	3,132,607.90
நிலையான சொத்துக்கள் மற்றும் பராமரிப்பு	31	3,968,285.00	4,480,273.43
வழங்கல் மற்றும் தேவைப்பாடுகள்	32	3,716,961.23	9,178,130.49
நிதிக் கட்டணங்கள்	33	743,353.00	3,191,853.99
நூலக சேவைகள்	34	306,332.50	344,093.50
பயிற்சி மற்றும் மதிப்பீடுகள்	35	72,160.00	1,181,402.21
வெளியீடுகள் மற்றும் தகவல் சேவைகள்	36	-	316,800.00
வெளிநாட்டுப் பயிற்சிகள் மற்றும் கல்விச் சுற்றுலாக்கள்	36-A	-	32,007,008.68
தேய்மானம்	37	36,891,534.85	37,245,423.64
பட்டப் பின் படிப்பு கற்கைகள் கல்லூரி	38	6,578,888.05	8,961,528.54
ஆங்கில நிகழ்ச்சித் திட்டங்கள்	39	1,349,310.00	2,386,103.58
ஆலோசனைச் சேவைகள்	40	14,032,754.44	51,648,093.20
பணிக்கொடைக்கான ஒதுக்கீடுகள்		6,411,337.00	4,475,874.30
நிச்சயமற்ற வருமதிகளுக்கான ஒதுக்கீடுகள்		3,210,085.05	653,305.83
மொத்தச் செலவினம்		**225,091,560.49**	**308,312,387.00**
இக் காலப்பகுதிக்கான மிகை/ (குறைபாடு)		**17,301,486.57**	**19,817,696.77**

இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகம்
2020 திசம்பர் 31 ஆம் திகதி முடிடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சற் கூற்று

ஆரம்ப செயற்பாகளில் காசுப் பாய்ச்சல்	2020 ரூபா.சதம்	2019 ரூபா.சதம்
தேறிய மிகை / இவ் வருடத்திற்கான குறைபாடு		
நிதி அசைவில் விளைவைக் கொண்டிராத பொருட்களுக்கான சீராக்கல்	**17,301,486.57**	**19,817,696.77**
தேய்மானம்	36,891,534.85	37,245,423.64
கடன் கழிப்பு	(27,942,011.29)	(30,687,849.95)
பணிக்கொடைக்கான ஒதுக்கீடுகள்	6,411,337.00	4,475,874.30
நிச்சயமற்ற பெறுவனவுகளுக்கான ஒதுக்கீடுகள்	3,210,085.05	653,305.83
முன்னைய வருட சீராக்கல்		
மோட்டார் வாகனங்களுக்கான மீள் மதிப்பீட்டு விளைவு	14,797,347.24	(2,917,891.53)
	(9,211,381.47)	0.00
மூலதன மாற்றங்கள் தொழிற்பட முன்னரான செயற்பாட்டு மிகை (குறைப்பு)	**41,458,397.95**	**28,586,559.06**
பங்குகளின் வீழ்ச்சி (அதிகரிப்பு)	324,303.70	(1,343,050.50)
முற்பண வீழ்ச்சி (அதிகரிப்பு)	223,538.64	1,647,632.92
முற்கொடுப்பனவுகளின் வீழ்ச்சி (அதிகரிப்பு)	(578,827.67)	50,858.90
ஊழியர்களின் கடன்கள் வீழ்ச்சி (அதிகரிப்பு)	1,908,684.56	(626,895.30)
	(24,785,434.94)	7,878,765.01
செலுத்த வேண்டிய வைப்புக்களின் அதிகரிப்பு வீழ்ச்சி)	(1,370,687.27)	(27,619,569.16)
அட்டுறுச் செலவுகளின் அதிகரிப்பு (வீழ்ச்சி)	1,364,485.52	(22,315,963.24)
முன்னெடுக்கப்படும் வேலைகளின் அதிகரிப்பு (வீழ்ச்சி)	1,644,343.69	(1,644,343.69)
ஆலோசனைச் சேவைகளின் அதிகரிப்பு (வீழ்ச்சி)	714,767.56	12,160,293.96
செலுத்தப்பட்ட பணிக்கொடை	(4,609,438.50)	(1,150,386.00)
செயற்பாட்டு நடவடிக்கைகளில் தேறிய பணப் பாய்ச்சல்	**(25,164,264.71)**	**(32,962,657.10)**
முதலீட்டு நடவடிக்கைகளில் பணப் பாய்ச்சல்		
கட்டிடங்கள் கையகப்படுத்தல்	(4,507,809.24)	(12,587,715.08)
தளபாடங்கள் மற்றும் பொருத்திகளின் குறைப்பு	742,255.36	(3,577,769.79)
அலுவலக உபகரணங்களின் குறைப்பு	638,263.52	(2,854,481.65)
மின் பொருத்திகளின் இணைப்பு	2,827,221.60	(4,425,536.40)
கணனிகள் கையகப்படுத்தல்	(184,450.00)	(2,810,489.80)
புத்தகங்கள் கையகப்படுத்தல்	(125,009.95)	(712,063.30)
ஏனைய சொத்துக்களின் குறைப்பு	371,006.86	(1,224,498.54)
பணிக்கொடை நிதி முதலீடு	(2,695,184.80)	(3,305,382.91)
குறுங்கால வைப்புக்கள்	(18,360,973.91)	(12,121,011.81)
முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்து தேறிய காசுப் பாய்ச்சல்	**(21,294,680.56)**	**(43,618,949.28)**
நிதிச் செயற்பாடுகளிலிருந்து காசுப் பாய்ச்சல்		
அரசாங்க மானியம் – மூலதனம்	8,200,000.00	0.00
டிஎல்சி லிமிட்டடின் அதிகரிப்பு (வீழ்ச்சி)	(1,655,058.83)	(1,655,058.83)
நிதிச் செயற்பாடுகளிலிருந்து தேறிய காசுப் பாய்ச்சல்	**6,544,941.17**	**(1,655,058.83)**
காசு மற்றும் காசுக்கு சமமானவற்றின் தேறிய அதிகரிப்பு / (வீழ்ச்சி)	1,544,393.85	(49,650,106.15)
ஆரம்ப காலப்பகுதிக்கான காசு மற்றும் காசுக்கு சமமானவை	22,918,072.02	72,568,178.17
முடிவடைந்த காலப்பகுதிக்கான காசு மற்றும் காசுக்கு சமமானவை	**24,462,465.87**	**22,918,072.02**

இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகம்
தேறிய சொத்துக்கள்/ உரிமை மாற்றங்கள் தொடர்பான கூற்று 2019 மற்றும் 2020 திசம்பர் 31 ஆம் திகதி முடிவடைந்த ஆண்டிற்கானது

	நிறுவனத்தைக் கட்டுப்படுத்துகின்ற உரிமையாளர்களுக்கு பின்வரக்கூடியது			மொத்த தேறிய சொத்துக்கள்/ உரிமை
	பங்களிப்புச் செய்யப்பட்ட மூலதனம்	ஏனைய ஒதுக்கங்கள்	திரண்ட மிகை/ (குறைப்புகள்)	
	ரூபா.சதம்	ரூபா.சதம்	ரூபா.சதம்	ரூபா.சதம்
2019 சனவரி 01 ஆம் திகதிய மீதி	595,232,238.83	12,015,807.00	52,081,705.58	659,329,751.41
கணக்கீட்டுக் கொள்கை மாற்றங்கள்				
கணக்கீட்டுக் கொள்கை மாற்றங்கள்			(2,917,891.53)	(2,917,891.53)
முன்னய வருட சீராக்கல்	595,232,238.83	12,015,807.00	49,163,814.05	656,411,859.88
மீள ஆரம்பிக்கப்பட்ட மீதி				
2019 இற்கான தேறிய சொத்து/ உரிமை மாற்றம்				
திறைசேரிப் பங்களிப்பு - மூலதனம்				
பிற்போடப்பட்ட வருமான மாற்றம்	(30,687,849.95)			(30,687,849.95)
இக் காலப்பகுதிக்கான மிகை/ குறைப்பு			19,817,696.77	19,817,696.77
முன்னெடுக்கப்பட்ட 2019 திசம்பர் 31 ஆம் திகதிய மீதி	564,544,388.88	12,015,807.00	68,981,510.82	645,541,706.70
2020 சனவரி 01 உள்ளவாறான மீதி	564,544,388.88	12,015,807.00	68,981,510.82	645,541,706.70
நிரந்தர சொத்துக்களின் மீள் மதிப்பீடு		46,600,000.00		46,600,000.00
கணக்கியல் கொள்கை மாற்றம்				-
முன்னைய வருட செம்மையாக்கல்			13,857,218.18	13,857,218.18
மீள ஆரம்பிக்கப்பட்ட மீதி	564,544,388.88	58,615,807.00	82,838,729.00	705,998,924.88
2020 ஆம் ஆண்டிற்கான தேறிய சொத்து/ உரிமை மாற்றம்				
திறைசேரிப் பங்களிப்பு - மூலதனம்	8,200,000.00			8,200,000.00
பிற்போடப்பட்ட வருமான மாற்றம்	(27,942,011.29)			(27,942,011.29)
இக் காலப்பகுதிக்கான மிகை/ குறைப்பு			17,301,486.57	17,301,486.57
முன்னெடுக்கப்பட்ட 2019 திசம்பர் 31 ஆம் திகதிய மீதி	544,802,377.59	58,615,807.00	100,140,215.57	703,558,400.16





பட்டப்பின் கல்வி நிருவாகம்

பட்டப்பின் கல்வி அலகானது ஒரு தொடர்முறையான படிமுறை நிகழ்ச்சிகளின ஊடாக பட்டங்களை வழங்குவதற்காக நிறுவப்பட்டதாகும்.

இப்பிரிவானது கல்வி கருத்திட்ட குழுக்களையும் கல்வி விவகாரத்து நிறைவேற்று சபையினையும் தன்னகத்தே கொண்டுள்ளது. இவ்விரு பிரிவுகளும் முகாமைத்துவ பட்டப்பின் படிப்புக்கு மாணவர்களை தெரிவு செய்வதற்குரிய, பாட உள்ளடக்கங்களை தீர்மானிப்பதற்கும், பரீட்சைப் பெறுபேறுகளை வெளியிடுவதற்குரிய மற்றும் ஒழுக்காற்று நடவடிக்கை எடுப்பதற்குரிய சட்டபூர்வ அதிகாரத்தை கொண்டுள்ளன.

பட்டப்பின் கல்வி நிருவாக அலகானது பொதுமுகாமைத்துவ மற்றும் ஆராய்சிப்படிப்புக்குரிய ஒரு பிரயோக நிலையமாகும். இப்பிரிவு வாடிக்கையாளரின் தேவைக்கேற்ப அதிதரமான தொழிற்றுறை மற்றும் கல்வி அபிவிருத்திக் கேற்ற பாடங்களை அறிமுகப்படுத்துகின்றது. பட்டப்பின் பாடநெறிகள் அனைத்தும் பொது தனியார் மற்றும் அரசு சார்ந்த துறைகளைச் சார்ந்த உத்தியோகத்தருக்கு பொதுவானவை.

இப்பாடநெறிக்குரிய பாட உள்ளடக்கங்களை கற்போரின் அறிவை மேம்படுத்தி அவர்களை பொருத்தமான தொழிற்றுறை முகாமையாளராக உருவாக்கும் வகையில் வடிவமைக்கப்படுகின்றன.

3. ஆளும் பேரவையின் உறுப்பினர்கள்

1982 ஆம் ஆண்டின் இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகச் சட்டம் பிரிவு 6(1) இன் நியதிகளின் படி கௌரவ பொது நிர்வாக அமைச்சர் அவர்கள் 2020 ஆம் ஆண்டிற்கான ஆளும் பேரவை உறுப்பினர்களாக பின்வரும் ஆட்களை நியமித்திருந்தார்.

திரு. ஜே. ஜே. ரத்தினசிறி - **தலைவர்**
செயலாளர்
பொதுச் சேவைகள், மாகாண சபைகள் மற்றும்
உள்ளூராட்சி அரசாங்க அமைச்சு

திரு. காமினி எஸ். செனரத் - **உறுப்பினர்**
பிரதம அமைச்சரின் செயலாளர்
பிரதம அமைச்சர் அலுவலகம்

திரு. எஸ். ஆர். அட்டிகலே - **உறுப்பினர்**
செயலாளர்
நிதி, பொருளியல் மற்றும் கொள்கை அபிவிருத்தி அமைச்சர்

பேராசிரியர். கே. கபில.சி.கே.பெரெரா - **உறுப்பினர்**
செயலாளர், கல்வி அமைச்சர்

திரு. சுமித் அபேசிங்க - **உறுப்பினர்**

திரு. கவுசல் மென்டிஸ் - **உறுப்பினர்**

திரு. ஆர்.ஜி. பண்டித கொரலக் - **உறுப்பினர்**

திரு. பி. அல்கம - **உறுப்பினர்**

திரு. கோடபாய ஜயரத்ன - **உறுப்பினர்**

திரு. கே.பி.வி.டி.என். முத்துகல - **உறுப்பினர்**

திரு. பி. எஸ்.பி அபேவர்தன - **உறுப்பினர்**

திருமதி/செல்வி. பி.ஜி.டி.பிரதிபா சேரசிங்க - **உறுப்பினர்**
இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவக பணிப்பாளர் நாயகம் (பதில்.)

4. சிரேஸ்ட முகாமைத்துவம் மற்றும் விரிவுரையாளர் குழாம்

4.1 பணிப்பாளர்கள் விபரம்

திருமதி/செல்வி. கே. எம்.எஸ்.டி. ஜயசேகர
பணிப்பாளர் நாயகம் (பதில்.) (2020.01.01- 2020.08.25)
மேலதிகப் பணிப்பாளர் நாயகம் (கற்றல் மற்றும் அபிவிருத்தி)
இலங்கை நிருவாக சேவை – விசேட வகுப்பு
பொது நிருவாக முதுமாணி, முகாமைத்துவ பட்டப் பின் படிப்பு முகாமைத்துவம், ஸ்ரீ ஜயவர்த்தனபுரப் பல்கலைக்கழகம், இலங்கை
மூலோபாய முகாமைத்துவ முதுமாணி, விக்டோரியாப் பல்கலைக்கழகம், அவுஸ்ரேலியா
முகாமைத்துவத்தில் பட்டப்பின் படிப்பு டிப்ளோமா, பி.ஐ.எம், இலங்கை
விஞ்ஞான இளமாணி (உயிரியல்), ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக்கழகம், இலங்கை

திருமதி. பி.ஜி.டி. பிரதீபா சேரசிங்க
பணிப்பாளர் நாயகம் (பதில்.) (2020.08.05 - 2020.12.31)
இலங்கை நிருவாக சேவை – விசேட வகுப்பு
வியாபார நிருவாக முதுமாணி- பொதுக் கொள்கைக் கல்லூரி, பேர்மிங்டன் பல்கலைக்கழகம், ஐக்கிய இராச்சியம்,
கலைமாணி (சிறப்பு) – வெகுஜனத் தொடர்பாடல் மற்றும் சிங்களம், ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக்கழகம், இலங்கை
விஞ்ஞான முதுமாணி - மானுடவியல், தாவர இரசாயனவியல், பேராதனைப் பல்கலைக்கழகம்.
சிறந்த ஆளுகை மற்றும் ஒழுக்கம் மீதான விசேட ஆர்வம்
பகிரங்கத் துறையில் விழுமியங்கள் மற்றும் தரநிலைகள், பாரம்பரிய முகாமைத்துவத்தில் சிறப்புத் தேர்ச்சி
பணிப்பாளர் அனுபவம்: பெண்களுக்கான பணியகம்- இலங்கை, இலங்கை தேசிய கல்வி ஆணைக்குழுச் செயலாளர், கலாசார அலுவல்கள் அமைச்சின் மேலதிகச் செயலாளர், தற்போது பொதுச் சேவைகள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அரசாங்க அமைச்சின் மேலதிகச் செயலாளர் (பொது நிருவாகம்)

திரு.ஜே. எஸ். பிரசாத் பியசேன
மேலதிகப் பணிப்பாளர் நாயகம் (நிருவாகம் மற்றும் நிதி)
இலங்கை நிருவாக சேவை – விசேட வகுப்பு
சமுகவியல் முதுமாணி, களனிப் பல்கலைக்கழகம்
எழுத்தாண்மை மற்றும் தொடர்பாடலில் பட்டப்பின் படிப்பு டிப்ளோமா
ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக்கழகம், இலங்கை
பிரயோக விஞ்ஞானத்தில் விஞ்ஞானமானி, ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக்கழகம், இலங்கை

திருமதி. நிரஞ்சலா.ஜே. ஜயசுந்தர
மேலதிகப் பணிப்பாளர் நாயகம் (நிறுவனஞ்சார் அபிவிருத்தி)
சூழற் பொருளியல் விஞ்ஞான முதுமாணி, விவசாயப் பட்டப்பின் படிப்பு நிறுவகம், பேராதனைப் பல்கலைக்கழகம்
விவசாய விஞ்ஞான முதுமாணி, பேராதனைப் பல்கலைக்கழகம்
சூழல் முகாமைத்துவத்தில் தொழில்வாண்மைச் சான்றிதழ், Carl Duiseberg Geselshaft (CDG), ஜேர்மனி
சிங்கப்பூர் சிவில் சேவை கல்லூரியின் பயிற்சி முறைமை மீதான அத்தாட்சிப்படுத்தப்பட்ட பிரதம பயிற்சியாளர் மற்றும் அமெரிக்க வன சேவையினால் அனர்த்த முகாமைத்துவத்தில் நிகழ்வுக் கட்டளை முறைமை மீதான அத்தாட்சிப்படுத்தப்பட்ட தேசிய பயிற்சியாளர்

திரு. டபிள்யு. எம். எம்.ஜி.டி. விஜேகோன்
மேலதிக பணிப்பாளர் நாயகம் (ஆய்வு மற்றும் அபிவிருத்தி/ முகாமைத்துவம் சாரா பயிற்சி)
விஞ்ஞான முதுமாணி (நகர சூழல் முகாமைத்துவம்), AIT- தாய்லாந்து
கலைமாணி (சிறப்பு) (புவியியல்), கொழும்பு பல்கலைக்கழகம்

கலாநிதி. (திருமதி.) எஸ்.ஆர்.எஸ்.என். சுதசிங்க
மேலதிகப் பணிப்பாளர் நாயகம் (பதில்) (பட்டப்பின் படிப்புக் கற்கைகள் கல்லூரி)
அபிவிருத்தி நிருவாகத்தில் கலாநிதி (பொதுக் கொள்கை முகாமைத்துவத்தில் சிறப்புக் கற்கை)
முதுமாணி (பொருளியல்), கொழும்புப் பல்கலைக்கழகம்
பொருளியல் அபிவிருத்தியில் பட்டப்பின் படிப்பு டிப்ளோமா (கொழும்புப் பல்கலைக்கழகம்)
கலைமாணி (சிறப்பு), ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக்கழகம்

4.2 சிரேஸ்ட கல்விசார் ஆலோசகர்கள்

திரு. ஜி.கே.டி. அமரவர்த்தன
சிரேஸ்ட கல்விசார் ஆலோசகர், இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகம்
முன்னாள் அமைச்சுச் செயலாளர்
முன்னாள் சிரேஸ்ட ஆலோசகர், இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகம்
பொதுக் கொள்கையில் முதுமாணி, ரேளு, சிங்கப்பூர்
கணனித் தொழில்நுட்பத்தில் பட்டப்பின் படிப்பு, தகவல் தொடர்பாடற் தொழில்நுட்பம்
விஞ்ஞான இளமாணி (சிறப்பு) – பௌதிகவியல், பேராதனைப் பல்கலைக்கழகம்

திரு. இராஜேந்திரகுமார் கணேசராஜா
சிரேஸ்ட கல்விசார் ஆலோசகர்
உதவி நகர்புறப் பணிப்பாளர், வலுவூட்டல் மற்றும் சமுக சேர்ப்பிற்கான ஆளுகை, ஐக்கிய நாடுகளின் அபிவிருத்தி நிகழ்ச்சி
தலைவர், ஆட்சி, கொள்கை மற்றும் ஆய்வு, இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகம்
தலைவர், திறன்கள் மேம்பாடு மற்றும் மொழிகள், இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகம்
தலைவர், தகவல் மற்றும் ஆவணமாக்கல், இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகம்
பொதுக் கொள்கை மற்றும் நிர்வாகத்தில் முதுமாணி (முதலாம் வகுப்பு)
பொது நிர்வாகத்தில் முதுமாணி (முதலாம் வகுப்பு சிறப்பு)
தாவரவியல் விஞ்ஞான இளமாணி விசேட பட்டம், முதலாம் வகுப்பு, சிறப்பு

திருமதி. சீதா சி. விதானாராச்சி
சிரேஸ்ட கல்விசார் ஆலோசகர், இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகம்
பாராளுமன்ற அலுவல்கள் அமைச்சின் ஓய்வுபெற்ற செயலாளர்
மொழிக் கல்வி மற்றும் பயிற்சிக்கான தேசிய நிறுவகத்தின் முன்னாள் தலைவர்
தேசிய பெறுகை ஆனைக்குழுவின் முன்னாள் செயலாளர் நாயகம்
மனிதவலுக் கற்கைகளில் பட்டப்பின் படிப்பு டிப்ளோமா
பெண்களுக்கான முகாமைத்துவ அபிவிருத்தியில் பட்டப்பின் படிப்புச் சான்றிதழ்
பொது முகாமைத்துவத்தில் பட்டப்பின் படிப்பு டிப்ளோமா
புவியியலில் விசேட பட்டம் 2 ஆம் வகுப்பு (சிறப்பு)

4.3 உள்ளக பீடம்

திரு. ஏ. லொகுகமகே
சிரேஸ்ட ஆலோசகர்
இலங்கை கணக்காளர் சேவை (தரம்-1)
முதுமாணி (நிதிப் பொருளாதாரம், கொழும்பு பல்கலைக்கழகம், பட்டப்பின் படிப்பு டிப்ளோமா(பொருளாதார அபிவிருத்தி)
பட்டப்பின் படிப்பு டிப்ளோமா (கூட்டு மற்றும் மூலோபாய நிதி)
HNDA, DPFM, DIPPCA, Dip in IT, MAAT

திருமதி. ஆர். திசாநாயக்க - சட்டத்தரணி
சிரேஸ்ட ஆலோசகர் (2020.01.01 - 2020.01.14)
இலங்கை நிருவாக சேவை (தரம்- I)
சத்தியப்பிரமாணம் பெற்ற ஆணையாளர்
செயல்திட்ட முகாமைத்துவ முதுமானி (MPM (Project Management)
சர்வதேச தொடர்பாடலில் பட்டப்பின் படிப்பு டிப்ளோமா
சட்டமாணி, இலங்கை திறந்த பல்கலைக்கழகம்
விஞ்ஞான இளமாணி (சிறப்பு), களனிப் பல்கலைக்கழகம்
DIPPCA.

செல்வி. தனுக்க்சா அபேவர்தன
சிரேஸ்ட ஆலோசகர்
இலங்கை நிருவாக சேவை (தரம்- I)
சர்வதேச தொடர்புகளில் முதுமாணி, ICU, டோக்கியோ, ஜப்பான்
வியாபார நிருவாகத்தில் முதுமாணி, பேராதனைப் பல்கலைக்கழகம்
சூழல் விஞ்ஞானத்தில் முதுமாணி, பேராதனைப் பல்கலைக்கழகம்
இலத்திறனியல் ஆளுகையில் பட்டப்பின் படிப்பு டிப்ளோமா, IPM, ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக்கழகம்
மானுடவியலில் விஞ்ஞான இளமானி (சிறப்பு), பேராதனைப் பல்கலைக்கழகம்
பொது நிருவாகத்தில் டிப்ளோமா, இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகம்

திரு.கே. ஆர். கங்காதார
சிரேஸ்ட ஆலோசகர் (2020.01.01 - 2020.01.06)
இலங்கை நிருவாக சேவை (தரம் – I)
சர்வதேச மற்றும் அபிவிருத்தி பொருளியலில் முதுமாணி (ANU, அவுஸ்ரேலியா)
சர்வதேச மற்றும் அபிவிருத்தி பொருளியலில் டிப்ளோமாப் பட்டம் (ANU, அவுஸ்ரேலியா)
புவியியலில் விஞ்ஞான இளமாணி விசேட கற்கை, பேராதனைப் பல்கலைக்கழகம்
பொது நிருவாக டிப்ளோமா (இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகம்)

திரு. எம். எஸ். அனுருத்த
சிரேஸ்ட ஆலோசகர்
இலங்கை கணக்கியல் சேவைகள் (தரம்- I)
வியாபார நிர்வாகத்தில் முதுமாணி, ரஜரட்ட பல்கலைக்கழகம்
கலை முதுமாணி (பொருளியல்), களனிப் பல்கலைக்கழகம்
பட்டய பொது நிதியியல் கணக்காளர் (CA இலங்கை)
பட்டய பொது நிதியியல் கணக்காளர் (லண்டன்)
சர்வதேச தொடர்புகளில் பட்டப்பின் படிப்பு டிப்ளோமா (BCIS)
விஞ்ஞான இளமாணி (சந்தைப்படுத்தல் முகாமைத்துவம்) விசேட கற்கை
DIPPCA, பொது நிர்வாகத்தில் டிப்ளோமா

திரு. எஸ். டி. என். யூ. சேனாதீர
சிரேஸ்ட ஆலோசகர்/ தலைவர்/ மொழிக் கற்கைகள் நிலையம்
இலங்கை நிருவாக சேவை (விசேட தரம்)
பொது நிர்வாகத்தில் முதுமாணி, பிலின்டர் பல்கலைக்கழகம், அவுஸ்ரேலியா
மொழியியலில் கலை முதுமாணி, களனிப் பல்கலைக்கழகம்
கலைமாணி, பேராதனைப் பல்கலைக்கழகம்

திரு.கே. பிரசன்ன சண்டித்
சிரேஸ்ட ஆலோசகர்
இலங்கை நிருவாக சேவை
வியாபார நிருவாக முதுமாணி, ரஜரட்ட பல்கலைக்கழகம்
விஞ்ஞான இளமானி, பேராதனைப் பல்கலைக்கழகம்
நிலைபேண் அபிவிருத்திக்கான கல்வியில் டிப்ளோமா, உப்பசலா பல்கலைக்கழகம், சுவிடன்

பொது முகாமைத்துவத்தில் டிப்ளோமா, சுவிடன்
அத்தாட்சிப்படுத்தப்பட்ட மனிதவள கணக்காய்வாளர்
பசுமைக் கட்டிடப் பேரவையின் இணைந்த தொழில்வாண்மையாளர்

திரு. சாந்த வீரசிங்க
சிரேஸ்ட ஆலோசகர்
இலங்கை நிருவாக சேவை (விசேட தரம்)
இலத்திறனியல் அரசாங்கத்தில் (PIM-SJP) பொது நிருவாக முதுமாணி
நிறுவனஞ்சார் முகாமைத்துவத்தில் முதுமாணி (பேராதனை),
கல்வியில் பட்டப்பின் படிப்பு டிப்ளோமா (கொழும்பு)
இலத்திறனியல் அரசாங்கத்தில் (PIM-SJP) பட்டப்பின் படிப்பு டிப்ளோமா,
விஞ்ஞான இளமாணி, களனிப் பல்கலைக்கழகம்
பொது நிர்வாகத்தில் டிப்ளோமா, இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகம்
ஆசிரியர் பயிற்சிச் சான்றிதழ் (தேசிய கல்வி நிறுவகம்)
மாவட்ட நிர்வாகம், மனிதவள முகாமைத்துவம் மற்றும் செயற்திட்ட முகாமைத்துவம், பொது நிர்வாகம் ஆகியவற்றில் அனுபவம்

திரு. என்.எம். எஸ். ஏ பண்டார
ஆலோசகர்
விஞ்ஞான முதுமாணி (தகவல் தொழில்நுட்பம்), மொரட்டுவப் பல்கலைக்கழகம் (வன விஞ்ஞானம்), ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக்கழகம்
விஞ்ஞான இளமாணி, ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக்கழகம்
திருமதி/செல்வி. ஹாசினி ஜயசேகர
ஆலோசகர்
உதவிப் பணிப்பாளர் (பரீட்சை) கடமைகளைப் பொறுப்பேற்றார் (2020.02.05 - 2021.12.31)
இலங்கை நிர்வாக சேவை – தரம் II
கலை முதுமாணி (சமூகவியல்), களனிப் பல்கலைக்கழகம்
சட்டமாணி, திறந்த பல்கலைக்கழகம்
கலைமாணி (சிறப்பு), கொழும்பு பல்கலைக்கழகம்

திரு. எல். சி. எம். பெரேரா
இணை ஆலோசகர்
நகர விஞ்ஞானத்தில் முதுமாணி, சியுள் பல்கலைக்கழகம், கொரியா
செயற்கை நுண்ணறிவில் முதுமாணி, மொரட்டுவ பல்கலைக்கழகம்
தகவல் தொழில்நுட்ப இளமாணி, கொழும்பு பல்கலைக்கழகம்

4.4 சேவை வசதிப்படுத்துநர் விபரம்

திருமதி. ஆர்.ஏ.எஸ்.பி.ரணவீர
பதிவாளர்
பட்டப்பின் படிப்பு டிப்ளோமா, ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம்
விஞ்ஞான இளமாணி (சிறப்பு), பேராதனைப் பல்கலைக்கழகம்

திரு. டி. எஸ். பத்மசிறி
பணிப்பாளர் (நிதி)
இலங்கை கணக்காளர் சேவை
விஞ்ஞான இளமாணி (பொது நிருவாக), விசேட கற்கை, ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம்
வியாபாரக் கற்கையில் டிப்ளோமா, பட்டையக் கணக்காளர் உரிமம், இலங்கை பட்டையக் கணக்காளர் நிறுவகம்

திரு.வை. அநிருத்தனன்
பணிப்பாளர் (நிருவாக)
இலங்கை நிர்வாக சேவை (தரம்-I)
அபிவிருத்திக் கற்கையில் முதுமாணி, கொழும்பு பல்கலைக்கழகம், கொழும்பு
பொதுக் கொள்கையில் முதுமாணி, ஆர்எம்ஐரி பல்கலைக்கழகம், அவுஸ்ரேலியா
விஞ்ஞான இளமாணி (சிறப்பு), இரசாயனவியல் விசேட கற்கை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

திருமதி. ரி.டி. நாரண்கொட
உள்ளகக் கணக்காளர்
கலை முதுமாணி (பொருளியல்), களனிப் பல்கலைக்கழகம்
வியாபாரம் மற்றும் நிதியியல் நிர்வாகத்தில் பட்டப்பின் படிப்பு டிப்ளோமா, இலங்கை பட்டையக் கணக்காளர் நிறுவகம்
டீடீஆவப. மனிதவளம் (விசேட கற்கை), களனிப் பல்கலைக்கழகம்
பட்டையக் கணக்காளர் உரிமம், இலங்கை பட்டையக் கணக்காளர் நிறுவகம்
எச்என்டிஐபிபிசிஏ, இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகம்

திருமதி. பி.ஏ. பிரியாணி பாலசூரிய
நூலகர்
பட்டய நூலகர், இலங்கை நூலக சங்க உறுப்பினர்
நூலக மற்றும் தகவல் விஞ்ஞாத்தில் முதுமாணி, களணிப் பல்கலைக்கழகம்
கல்வியில் பட்டப்பின் படிப்பு டிப்ளோமா, பேராதனைப் பல்கலைக்கழகம்
கலைமாணி, களணிப் பல்கலைக்கழகம்
நூலக விஞ்ஞானத்தில் டிப்ளோமா, இலங்கை நூலக சங்கம்
முகாமைத்துவத்தில் டிப்ளோமா, இலங்கை திறந்த பல்கலைக்கழகம்

திருமதி/செல்வி. எஸ். எல். ஐ. சமர விக்ரம
உதவிப் பதிவாளர்
கலை முதுமாணி (பொருளியல்), களணிப் பல்கலைக்கழகம்
மனிதவள முகாமைத்துவத்தில் விஞ்ஞான இளமாணி (விசேட கற்கை), ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம்





பயிற்சி மற்றும் கல்வி நடவடிக்கைகள்

இந்நிறுவனத்தின் பட்டப்பின் பாடநெறியில் இணையும் மாணவர்களுக்கு தகவல் தொழில் நுட்ப மற்றும் விசேஷ துறைசார் அனுபவங்களை பெற்றுக் கொள்ள வாய்ப்பளிப்பதனூடாக அவர்களுடைய தொழிற்றுறை நோக்கங்களை அடைவதற்கு வாய்ப்புக்களை வழங்கப்படுகிறது.


பயிற்சி மற்றும் கல்வி நடவடிக்கைகள் பயிற்சி மற்றும் கவ்விப்பிரிவின் முதலான தொழிற்பாடானது பொது முகாமைத்துவ சேவையிலுள்ள அனைத்து தரத்திலுமுள்ள உத்தியோகத்தர்களின் அறிவு மற்றும் திறன்களை விருத்தி செய்வதனூடாக அதியுயர் தரமான பொதுச் சேவையினை நாட்டிற்கு வழங்கலாகும்.

பயிற்சி நடவடிக்கைகளுக்கு மேலதிகமாக, நிகழ்ச்சித்திட்டப்பிரிவானது பயிற்சி மற்றும் முகாமைத்துவ ஆலோசனைகளைச் சேவைகளை பொதுச் சேவையின் விளைவுத்திறனையும் வினைத்திறனையும் அதிகரிக்கும் நோக்கில் வழங்குகிறது.


இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகமானது கடந்த 50 வருடங்களாக இலங்கையின் அபிவிருத்திக்கும் தேவையான வினைத்திறனான மற்றும் விளைவுத்திறனான மனித வளத்தை பொதுச் சேவைகளுக்கு அளிப்பதனூடாக. நிறைவேற்றி வருகிறது.

5. தொழிற்பாட்டு ரீதியான மற்றும் நிறுவனக் கட்டமைப்பு

5.1 இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகம்



5.2 இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகத்தின் நிறுவனக் கட்டமைப்பு



06. பணிப்பாளர் நாயகத்தின் மீளாய்வு

கற்றல் மற்றும் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் - 2020

கற்றல் மற்றும் அபிவிருத்திப் பிரிவு இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகத்தின் அனைத்து கற்றல் மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைளைக் கையாளுகின்ற முக்கியமான அலகாகும். அரச துறை உத்தியோகத்தர்களின் திறன் விருத்தித் தேவைகளை எட்டுவதற்கு கற்றல் மற்றும் அபிவிருத்திச் சேவைகள் தேவைப்பாட்டினை இது வழங்குகின்றது. இக் காரணத்திற்காக அரச துறையின் மாறிவருகின்ற திறன் மேம்பாட்டுத் தேவைகளை ஈடுசெய்கின்ற கட்டமைப்பொன்றை இப் பிரிவு கொண்டுள்ளது.

அரச துறை நிறுவனங்கள் மற்றும் அவற்றின் முகாமைத்துவ ரீதியான பணியாளர்களின் திறன்களைக் கட்டியெழுப்புவதற்காக பின்வரும் செயற்பாடுகளை இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகம் நடாத்துகின்றது.

1. உரிய சேவைப்பிரமாணக் குறிப்புகளுக்கிணங்க பின்வரும் நாடளாவிய சேவை அனைத்தினதும் புதிய ஆட்சேர்ப்பிற்கான ஆரம்பப் பயிற்சி (கட்டணம் அறவிடப்படாத பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள்)
   i. இலங்கை நிருவாக சேவை (இ.நி.சே),
   ii. இலங்கை கணக்காளர் சேவை(இ.க.சே),
   iii. இலங்கை திட்டமிடல் சேவை (இ.தி.சே),
   iv. இலங்கை விஞ்ஞான சேவை (இ.வி.சே)
   v. இலங்கை கட்டிடக் கலையியற் சேவை (இ.க.க.சே)
   vi. இலங்கை பொறியியலாளர் சேவை (இ.பொ.சே)
   vii. இலங்கை தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப சேவை (இ.த.தொ.தொ.சே)

2. அனைத்து நாடளாவிய சேவைகள் உத்தியோகத்தர்கள் தமது தரம் I மற்றும் தரம் III மட்டங்களின் போது கட்டாய திறன் விருத்தி நிகழ்ச்சித் திட்டங்கள் (கட்டணம் அறவிடப்படாத பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள்)

3. டிப்ளோமா நிகழ்ச்சித் திட்டங்கள் (கட்டணம் அறவிடப்படும்)

4. குறுங்கால நிகழ்ச்சித் திட்டங்கள் (கட்டணம் அறவிடப்படாத பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள்)

5. தேவைகளுக்கேற்ப நடாத்தப்படும் நிகழ்ச்சித்திட்டம் – அரச துறை நிறுவனங்கள் மற்றும் அரச தொழில்முயற்சிகள் மூலம் மேற்கொள்ளப்படும் வேண்டுகொளின் அடிப்படையில் (கட்டணம் அறவிடப்படும் நிகழ்ச்சித்திட்டங்கள்)

6. முகாமைத்துவ ஆலோசனைகள் (கட்டணம் அறவிடல்)

7. ஏனைய முயற்சிகள் (கட்டணம் அறவிடப்படாத மற்றும் கட்டணம் அறவிடப்படும் நிகழ்ச்சித்திட்டங்கள்)

6.1 கட்டாய பயிற்சி நிகழ்ச்சிகள்

அனைத்து நாடளாவிய சேவைகளுக்கு புதிதாக ஆட்சேர்ப்புச்செய்யப்படுபவர்களுக்கான ஆரம்பப் பயிற்சிகள் பரந்த விடயப் பரப்பினை வழங்குவதற்காகவும் அவர்களின் உரிய சேவையில் முன் வரிசையாளர்களாக செயலாற்றுவதற்குத் தேவையான அறிவு, திறன் மற்றும் மனப்பாங்குடன் அவர்கள் தயார்படுத்துவதற்காகவும் நடாத்தப்படுகின்றது. பிரதான விடயங்களில் பாடவிதானங்களுக்கு மேலதிகமாக இந் நிகழ்ச்சித்திட்டம் தனிப்பட்ட மற்றும் மனப்பாங்கு விருத்திக்கான ஊவா குடாஓயா விசேட அதிரடிப்படை பயிற்சிப் பாடசாலையில் பங்குபற்றுகின்ற வெளிகளப் பயிற்சி போன்ற நிகழ்ச்சித் திட்டங்களையும் உள்ளடக்கியுள்ளது. மேலும், இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகத்தின் மொழிப் பிரிவு அவர்களின் ஆரம்ப பயிற்சிகளில் மொழிப் பயிற்சியினையும் நடாத்துகின்றது. சில நிகழ்ச்சித் திட்டங்கள் அரசகரும மொழிகள் திணைக்களத்துடன் இணைந்து நடாத்தப்பட்டது.

கொவிட்-19 தொற்றுநோயின் காரணமாக இவ் வருட காலப்பகுதியின் போது கீழுள்ள மீளாய்வின் படி இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகம் 71 உத்தியோகத்தர்களுக்கான 02 ஆரம்ப நிகழ்ச்சித் திட்டங்களை மாத்திரமே நடாத்தியுள்ளது.

தொடர் இல.	சேவை	பங்குபற்றுநர் தொகை	வளர்ச்சி
01	ஆரம்ப பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் இ.த.தொ.தொ.சே வகுப்பு II தரம் II	36	நிறைவு செய்யப்பட்டுள்ளது
02	இலங்கை விஞ்ஞான சேவை	35	நிறைவு செய்யப்பட்டுள்ளது
	மொத்தம்	71	

6.2 அனைத்து நாடளாவிய சேவைகளுக்கான கட்டாயக் கற்றல் மற்றும் அபிவிருத்தி நிகழ்ச்சிகள்

அனைத்து நாடளாவிய சேவை உத்தியோகத்தர்களின் தொழிற்துறை விருத்திக்குத் தேவையான தேவைப்படுத்தப்படும் அறிவு, திறன் மற்றும் மனப்பாங்கு அகியவற்றைத் தொடர்ந்து மேம்படுத்தி விருத்தி செய்வதை இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகம் தனது பிரதான பொறுப்புக்களுள் ஒன்றாக அங்கீகரித்துள்ளது.

அனைத்து நாடளாவிய சேவைகளின் சேவைப் பிரமாணக் குறிப்பின் பிரகாரம் ஆரம்ப பயிற்சி மற்றும் திறன் விருத்தி நிகழ்ச்சித்திட்டங்களை பூர்த்திசெய்ய வேண்டியது இச் சேவையிலுள்ள உத்தியோகத்தர்களின் கட்டாய தேவைப்பாடாகும்.

ஆகவே, இவ் உத்தியோகத்தர்கள் மத்தியில் தொடர்ச்சியான கற்றல் கலாசாரமொன்றை வளர்ப்பது வினைத்திறனானதும் விளைதிறனானதுமான அரச சேவையினை உறுதி செய்வதற்கு மிக முக்கியமாளதாகும். அதன் பிரகாரம் பின்வரும் கருத்துக்களின் அடிப்படையில் அனைத்து நாடளாவிய சேவை உத்தியோகத்தர்களுக்கும் இந் நிகழ்ச்சிகள் தனியாக நடாத்தப்படுகின்றன.

- காலத்திற்குக் காலம் தேவைப்படுத்தப்படக் கூடிய குறிப்பாக அடையாளங்காணப்பட்ட நடத்தை மற்றும் தொழில்நுட்பப் போட்டிகளை நடாத்துதல்
- வேகமாக மாறுகின்ற சூழலில் தொடர்ந்து அதிகரிக்கும் சவால்களைச் சமாளிப்பதற்குத் தேவையான அறிவு மற்றும் திறன்களை தரவேற்றி வளர்த்தல்

அதற்கமைய, 2020 ஆம் ஆண்டில் இந் நிறுவனத்தினால் நடாத்தப்பட்ட இலங்கை நிருவாக சேவை மற்றும் இலங்கை கணக்காளர் சேவை உத்தியோகத்தர்கள் 596 பேருக்கு நடுத்தர தொழிற்திறனைக் கட்டியெழுப்புதல் நிகழ்ச்சித்திட்டங்களை பின்வருமாறு.

	சேவை	நிகழ்ச்சித்திட்டங்களின் எண்ணிக்கை	பங்குபற்றுநர்களின் எண்ணிக்கை	வளர்ச்சி
1	இ.நி.சே தரம் I	2	80	நடைபெற்றுக்கொண்டிருக்கிறது
2	இ.நி.சே தரம் III	3	128	நடைபெற்றுக்கொண்டிருக்கிறது
3	இ.க.சே தரம் I	4	170	நடைபெறுகிறது
4	இ.க.சே தரம் III	5	218	• 3 நிகழ்ச்சித்திட்டங்கள்- நிறைவு • 2 நிகழ்ச்சித்திட்டங்கள் – நடைபெற்றுக்கொண்டிருக்கிறது
	Total		**596**	

3. திறன் விருத்தி நிகழ்ச்சிகள் - இலங்கை விஞ்ஞான சேவைகள் மற்றும் கட்டிடக் கலையியற் சேவை தரம் I, II & III

முகாமைத்துவ திறன் விருத்தி நிகழ்ச்சித் திட்டம் இலங்கை விஞ்ஞான சேவை கட்டிடக் கலையியற் சேவை மற்றும் தொழில்நுட்ப சேவை (தரம் I, II மற்றும் III) உத்தியோகத்தர்களுக்கா வடிவமைக்கப்பட்டுள்ளதுடன் இச் சேவை தொடர்பான அறிவு மற்றும் திறன்களை விருத்தி செய்வதலும் சிறந்த சேவையினை (இலங்கை விஞ்ஞான சேவை/ கட்டிடக் கலையியற் சேவை/ தொழில்நுட்பச் சேவை) நோக்கிய நேர்மறையான மனப்பாங்கினை விருத்தி செய்வதலும் இந் நிகழ்ச்சித்திட்டத்தின் இலக்காகும்.

இச் சேவையில் தொழில்வாண்மையாளராக தேவைப்படுத்தப்படும் முகாமைத்துவ மற்றும் தொழில்நுட்பப் பார்வை இரண்டையும் அவர்கள் வெளிப்படுத்துவதன் மூலம் அவர்களின் தொழல்வாண்மைத் திறன் மற்றும் தொழில் விருத்தியை உயர்த்துவதற்கு பங்குபற்றுநர்களுக்குச் சந்தர்ப்பமொன்றை இந்த நிகழ்ச்சி வழங்குகிறது. இந்த நிகழ்ச்சித்திட்டம் 2019 மற்றும் 2020 ஆகிய இரு ஆண்டுகளிலும் 441 மொத்த பங்குபற்றுநர்களுக்கு நடாத்தப்படத் திட்டமிடப்பட்டிருந்தது. 2020 ஆண்டு காலப்பகுதியின் போது பின்வரும் இரு குழுக்களுக்கு இந்த நிகழ்ச்சித்திட்டம் நடாத்தப்பட்டுக்கொண்டிருக்கின்றது.

இல.	குழு	உண்மையான பங்குபற்றுநர்களின் எண்ணிக்கை	வளர்ச்சி
1	குழு 1	34	நடைபெற்றுக்கொண்டிருக்கிறது
2	குழு 2	29	நடைபெற்றுக்கொண்டிருக்கிறது

6.4 டிப்ளோமா நிகழ்ச்சித்திட்டங்கள்

இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகம் (SLIDA) அரச பெறுகை மற்றும் ஒப்பந்த நிர்வாகம் (DIPPCA) மற்றும் உயர் அரச பெறுகை மற்றும் ஒப்பந்த நிர்வாகம் (HNDIPPCA), தகவல் தொழில்நுட்ப டிப்ளோமா (DIT), அலுவலக முகாமைத்துவ டிப்ளோமா (DOM), களஞ்சிய முகாமைத்துவ டிப்ளோமா (DSM) மற்றும் தொழல்வாண்மையாளருக்கான ஆங்கில டிப்ளோமா (DEP) மற்றும் நிர்வாகச் சட்டத்தில் டிப்ளோமா ஆகிய துறைகளில் நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்கின்றது.

2020 ஆம் ஆண்டு பின்வரும் டிப்ளோமா நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்பட்டுள்ளன.

தொடர் இலக்கம்	நிகழ்ச்சித்திட்டத்தின் பெயர்	பங்குபற்றுநர்களின் எண்ணிக்கை	வளர்ச்சி
1	அரச பெறுகை மற்றும் ஒப்பந்த நிர்வாகத்தில் தேசிய டிப்ளோமா– 2020/2021 (புதன்)	40	நடைபெற்றுக்கொண்டிருக்கிறது
02	அரச பெறுகை மற்றும் ஒப்பந்த நிர்வாகத்தில் உயர் தேசிய டிப்ளோமா– 2020/2021 (செவ்வாய்)	55	நடைபெற்றுக்கொண்டிருக்கிறது
03	அரச பெறுகை மற்றும் ஒப்பந்த நிர்வாகத்தில் உயர் தேசிய டிப்ளோமா - 2020/2021 (வியாழன்)	35	நடைபெற்றுக்கொண்டிருக்கிறது
04	அலுவலக முகாமைத்துவத்தில் டிப்ளோமா	40	நடைபெற்றுக்கொண்டிருக்கிறது
05	நிர்வாகச் சட்டத்தில் டிப்ளோமா (சனி)	38	நடைபெற்றுக்கொண்டிருக்கிறது
	மொத்தம்	208	

6.5 தனிப்பட்ட பயிற்சி நிகழ்ச்சிகள்

வாடிக்கையாளர் நிறுவனங்களினால் மேற்கொள்ளப்படும் வேண்டுகோளுக்குப் பொருத்தமானவாறு இந்த நிகழ்ச்சித்திட்டங்கள் விசேடமாக வடிவமைக்கப்பட்டுள்ளன. 2020 ஆம் ஆண்டு காலப்பகுதியின் போது இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகம் 15 பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்தியுள்ளதுடன் 2020 ஆம் ஆண்டு காலப்பகுதியில் இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகம் 15 பயிற்சி நிகழ்ச்சிகளை நடாத்தியுள்ளதுடன் அரச துறை நிறுவனங்களின் வேண்டுகோளின் பேரில் 594 உத்தியோகத்தர்களுக்குப் பயிற்சி வழங்கியுள்ளது. 2020 ஆம் ஆண்டு பின்வரும் தனிப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்பட்டுள்ளது.

தொடர் இல	வாடிக்கையாளர் நிறுவனங்கள்	தனிப்பட்ட பயிற்சி வழங்கப்பட்ட துறைகள்	பங்குபற்றுநர்களின் எண்ணிக்கை
1	கல்வி அமைச்சு	பதவியணி உத்தியோகத்தர்களுக்கான திறன்களைக் கட்டியெழுப்புதல் பற்றிய தனிப்பட்ட பயிற்சி நிகழ்ச்சிகள்	37
2	கல்வி அமைச்சு	பதவணி உத்தியோகத்தர்களுக்கான திறன்களைக் கட்டியெழுப்புதல் பற்றிய தனிப்பட்ட பயிற்சி நிகழ்ச்சிகள்	37
3	இலங்கை விமானசேவை அதிகாரசபை	முகாமையாளர்களுக்கான தனிப்பட்ட கட்டாய பயிற்சி நிகழ்ச்சி	12

4	பனை அபிவிருத்தி சபை	திறன்களைக் கட்டியெழுப்புதல் பற்றிய தனிப்பட்ட பயிற்சி நிகழ்ச்சிகள்	19
5	பொது நிருவாக, அனர்த்த முகாமைத்துவ மற்றும் கால்நடை அபிவிருத்தி அமைச்சு	அரச துறையில் மனிதவள அபிவிருத்தி பற்றிய தனிப்பட்ட பயிற்சி நிகழ்ச்சி	40
6	இலங்கை உயர் தில்நுட்ப கல்வி நிறுவகம்	வருடாந்த செயற்திட்டத் தயாரிப்பிற்கான தனிப்பட்ட பயிற்சி நிகழ்ச்சி	59
7	கல்வித் திணைக்களம்	தகவல் தொழில்நுட்ப உத்தியோகத்தர்களுக்கான தனிப்பட்ட பயிற்சி நிகழ்ச்சி	50
8	தேசிய பொலிஸ் பயிற்சி நிறுவனம்	பிரதிப் பொலிஸ்மா அதிபர்களுக்கான முகாமைத்துவம் மற்றும் அபிவிருத்தி பற்றிய தனிப்பட்ட பயிற்சி நிகழ்ச்சித்திட்டம்	10
9	நிலைபேண் அபிவிருத்திப் பேரவை	அலுவலக முகாமைத்துவம் மற்றும் அரசாங்கம் பற்றிய தனிப்பட்ட கட்டாய நிகழ்ச்சித்திட்டம்	12
10	தேசிய பொலிஸ் பயிற்சி நிறுவனம்	சிரேஸ்ட பொலிங் அத்தியட்சகர் பதவிக்கு உத்தியோகத்தர்களைப் பதவியுயர்த்துவதற்கான முகாமைத்துவம் மற்றும் அபிவிருத்தி பற்றிய தனிப்பட்ட பயிற்சி நிகழ்ச்சி	29
11	புள்ளிவிபரவியல் திணைக்களம்	தேவைப்படுத்தப்படும் புள்ளிவிபரவியலாளர்களுக்கான கட்டாய பயிற்சி நிகழ்ச்சி	45
12	பணிவு மற்றும் உள்ளடக்க அலுவலகம்	எல். ஏ மற்றும் டிஸ் (LA's & DS's) ஆகியோருக்கான தையற் பயிற்சி	30
13	அனர்த்த முகாமைத்துவ நிலையம்	அனர்த்த இடர் முகாமைத்துவம் பற்றிய திறன்களைக் கட்டியெழுப்புதல் நிகழ்ச்சித்திட்டம்	31
14	பொது நிருவாக, அனர்த்த முகாமைத்துவ மற்றும் கால்நடை அபிவிருத்தி அமைச்சு	சர்வதேச டோஸ் மாஸ்டர் பேச்சுத் திறன்	37
15	உள்ளூர், உள்விவகார மற்றும் மாகாண சபை மற்றும் உள்ளூராட்சி அமைச்சு	நிருவாக கிராம சேவகர்களுக்கான தனிப்பட்ட பயிற்சி நிகழ்ச்சி	146

6.6 முகாமைத்துவ ஆலோசனைகள்


இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவக கற்றல் மற்றும் அபிவிருத்திப் பிரிவு அரச துறை நிறுவனங்களுக்கான முகாமைத்துவ ஆலோசனைகளை வழங்குவதில் ஈடுபட்டுள்ளது. வழமையாக இவ் ஆலோசனைகள் வெற்றிடங்கள், செயன்முறைகள், வேலைப்பளு மதிப்பீடு மற்றும் கையேடுகள் மற்றும் வழிகாட்டல்கள் தயாரித்தல், கூட்டுறவுத் திட்டமிடல், எச்ஆர்டி (HRD) திட்டங்கள் மற்றும் செயற்திறன் விருத்தி செயல்நுணுக்கத் திட்டங்கள் மற்றும் ஏனையவை நடாத்தப்படுகின்றன. பின்வரும் நிறுவன அபிவிருத்திச் சேவைகள் இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகத்தினால் 2020 ஆம் ஆண்டு வழங்கப்பட்டுள்ளன.

- பொது நிருவாக அமைச்சிற்கான இலத்திரனியல் பிரசைகள் தகவல் முறைமை தயாரித்தல் – ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம்
- தெஹிவளைக்கான ஈஆர்பி (ERP) முறைமை அமுலாக்கம் (கட்டம் I) – கல்கிசை மாநகர சபை

07. பட்டப்பின் படிப்பு கற்கைகள் கல்லூரி

2003 ஆம் ஆண்டில் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகச் சட்டம், 1985 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க சட்டம் திருத்தியமைக்கப்பட்டவாறாக பிரிவு 25அ இன் கீழ் மேற்கொள்ளப்பட்ட கட்டளையின் பிரகாரம் இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகத்தினால் முதுமாணிப்பட்டத்தினை வழங்கும் அந்தஸ்து பெறப்பட்டுள்ளது. அதன்பிரகாரம் பட்டப்பின் படிப்பு கற்கைகள் கல்லூரியை நிறுவியதுடன் பின்னர் அக் கல்லூரியைத் தேசிய வலய மற்றும் சர்வதேச மட்டத்தில் தொடர்ச்சியாக அரச பிரிவு வல்லுநர்களுடன் இணைந்து நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இம் முதுமாணிப் பட்ட நிகழ்ச்சித்திட்டம் தனியார் துறைக்கும் வழங்கப்பட்டுள்ளதுடன் வார மற்றும் வார இறுதி நாட்களில் நடாத்தப்படுகின்றமையால் ஆயுதப்படை, பொலிஸ் மற்றும் சுகாதாரத் துறை உத்தியோகத்தர்கள் மத்தியில் நடாத்தப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்களின் பின்னர் அதிகம் நாடப்படுவதாகவுள்ளது. அரச முகாமைத்துவ முதுமாணிப் பட்ட (MPM) நிகழ்ச்சித்திட்டத்தினை அபிவிருத்தி செய்தல் தொடர்பான கோட்பாட்டினை அடிப்படை அமைச்சுச் செயலாளர்கள், பிரதான நிறைவேற்று அலுவலகர்கள் மற்றும் ஏனைய நலனுரித்தாளர்கள் போன்றோர் தமது முகாமையாளர்களிடமிருந்து எதிர்பார்க்கும் தற்கால பெறுமதி சேர் பங்களிப்பிற்கான கேள்வி அதிகரிக்கப்படுமிடத்து இன்று வேகமான மற்றும் சவால் மிக்க அரச முகாமைத்துவ சூழலின் பின்னணியின் அடிப்படையிலுள்ளது. இவ் ஆஆ நிகழ்ச்சித்திட்டம் முதுமாணிப் பட்டமொன்றை அடைவதற்கு அதனைக் கற்போரை விருத்தியாக்குவதுடன் வித்தியாசமான முகாமைத்துவ மட்டங்களில் தன்நம்பிக்கையுடன் தொழிற்படுவதற்கு அவர்களுக்கு வழிகாட்டவும் செய்கின்றது.

SPS இன் MPM இந் நாட்டின் பிரதான பிரத்தியேக முதுமாணி நிகழ்ச்சித்திட்டங்களுள் ஒன்றாகும். மேலும், பங்குபற்றுநர்களின் தெரிவுமுறை, இந் நிகழ்ச்சித் திட்ட உள்ளடக்கம் மற்றும் விநியோக முறை ஏனைய ஒத்த நிகழ்ச்சித்திட்டங்களிலிருந்து வேறுபட்டதென்பதுடன் அதன் பிரகாரம் பங்குபற்றுநர்கள் பிரத்தியேகமாக வேறு நாடொன்றிற்கு சுற்றுலா செல்லும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. அதன் விளைவாக பங்குபற்றுநர்கள் இந் நிகழ்ச்சியில் இணைந்துகொள்வதற்கு அதிக கேள்வி காணப்படுவதுடன் அவ் எண்ணிக்கை அதிகரித்துக்கொண்டிருக்கின்றது.



அட்டவணை 1X

இன்று வரை MPM நிகழ்ச்சித்திட்டத்தில் இணைந்து கொண்டோர் எண்ணிக்கை

2020 இன் ஆரம்பத்தில் 89 விண்ணப்பதாரிகள் பதிவுசெய்யப்பட்ட 2020 மார்ச் 03 ஆம் திகதிய 2019 – 2021 ஆண்டிற்கான மாணவர்களை உள்வாங்குகின்ற ஆரம்ப வைபவம் SPS இனால் ஒழுங்கு செய்யப்பட்டது. இவ் வருடத்தில் SPS 247 மொத்த மாணவர்களுடன் MPM இன் மூன்று சமமான தொகுதி வகுப்புக்களை நடாத்தியுள்ளது.

அறிவை உருவாக்குதல், பயன்படுத்தல் பாதுகாத்தல் மற்றும் பரப்புதல் ஆகியவற்றுக்காக SPS காலத்திற்குத் தகுந்த முக்கிய தலைப்புகள் பற்றி அரச துறை மற்றும் தனியார் துறைப் பங்குபற்றுநர்களுக்கான பல்வேறான கலந்துரையாடல்கள் மற்றும் விசேட விரிவுரைகளை நடாத்தியுள்ளது. பட்டமொன்றை வழங்கும் நிறுவகமாக SPS

அரச துறையினருக்கு கருத்தரங்கு போன்ற விசேட நிகழ்வுகளை நடாத்துகின்றது.

அரச மற்றும் தனியார் துறை இரண்டிலும் பங்குபற்றுநர்கள் மற்றும் ஆர்வமுள்ள தரப்பினருக்கு ஆஆ கற்கை நெறியினை வழங்கும் நோக்குடன் இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவக பட்டப்பின் படிப்பு கற்கைகள் கல்லூரி இலங்கை அரச மற்றும் தனியார் துறைகளிலுள்ள நிறைவேற்றுநர்களின் முகாமைத்துவத் திறனை உயர்த்தும் நோக்கில் உள்ளூர் மற்றும் உலகளாவிய ரீதியில் முக்கிய தற்போதைய தலைப்புகள் பற்றி பொது விரிவுரைகளை ஒழுங்கமைக்கின்றது.

அதிக பங்குபற்றுநர்கள் சமுகமளித்திருந்த "நிர்வாக தீர்மானங்களை மேற்கொள்ளல்: மனித உரிமை மற்றும் அடிப்படை உரிமை நேக்கு" எனும் தலைப்பில் இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகத்தில் 2020 சனவரி 16 ஆம் திகதி அரச விரிவுரையொன்றை கலாநிதி. பிரதீபா மகாநாம கேவா, பீடாதிபதி, சட்ட பீடம், தொழில்நுட்ப பல்கலைக்கழகம், ஜமெகா நடாத்தியிருந்தார்.

ளுனுடீ வங்கியின் பிரதம நிறைவேற்று உத்தியோகத்தர் திரக் பியதிகம அவர்கள் அதிக பார்வையாளர்களைக் கொண்ட "தனியார் துறையின் சிறப்பு நடைமுறை: அரச துறைக்கான கற்பித்தல்கள்" எனும் தலைப்பில் இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகத்தில் 2020 பெப்ரவரி 13 ஆம் திகதி அரச விரிவுரையொன்றை எனும் தலைப்பில் இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகத்தில் 2020 சனவரி 16 ஆம் திகதி அரச விரிவுரையொன்றை நடாத்தியிருந்தார்.

2020 பெப்ரவாரி 27 ஆம் திகதி கொழும்பு பல்கலைக்கழக பொருளியற் பிரிவு, பொருளியல் பேராசிரியர் (பேரா.) டி.ஏ.சி. சில்வா அவர்களும் "அபிவிருத்தி மற்றும் கொள்கைத் திட்டமிடல் பற்றிய பொருளியல் அம்சம்" எனும் தலைப்பில் இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகத்தில் விரிவுரையொன்றை நடாத்தியிருந்தார்.

இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகத்தின் மேலதிக பணிப்பாளர் நாயகம் (SPS) (பதில்) கலாநிதி. எஸ். ஆர். எஸ். என் சுதாசிங்க அவர்கள் 2020 மே 06 ஆம் திகதி "கொவிட் 19 நோய் பரவலின் போது அரசதுறை முகாமையாளர்களின் வகிபங்கு" மற்றும் 2020 மே 15 ஆம் திகதி "சமுதாய ஈடுபாடு மற்றும் வலுப்படுத்தலூடாக பரிமாற்றங்களைத் தகர்த்தல்" ஆகிய வெப்பினார் விரிவுரைகளை நடாத்தியிருந்தார்.



08. 2020 ஆம் ஆண்டு நடாத்தப்பட்ட விரிவுரைகள்

இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகத்தின் பரீட்சைப் பிரிவு வெளிவாரி நிறுவனங்களுக்காக 07 மற்றும் ஏனையவை உள்வாரி நிகழ்ச்சித்திட்டங்களுக்காக மொத்தம் 14 பரீட்சைகளை நடாத்தியுள்ளது.

வெளிவாரிப் பரீட்சைகள் பிரதானமாக வினைத்திறன் காண் தடைதாண்டற் பரீட்சை மற்றும் உள்ளக பதவியுயர்வு பரீட்சைகளை உள்ளடக்கியிருந்தது. பின்வரும் உள்ளக மற்றும் வெளியக பரீட்சைகள் மீள்பார்வையின் கீழ் இக் காலப்பகுதியில் இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகத்தினால் நடாத்தப்பட்டது. இது 01 இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகத்தின் தகவல் தொழில்நுட்ப நிலையத்தின் உதவியுடன் நிகழ்நிலைப் பரீட்சையாக நடாத்தப்பட்டது.

2020 காலப்பகுதியின் போது நடாத்தப்பட்ட பரீட்சைகள்

உள்வாரிப் பரீட்சைகள்

தொ. இல.	பிரிவு	பரீட்சையின் பெயர்	பரீட்சாத்திகளின் எண்ணிக்கை
1	இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகம்	HN DIPCA நிகழ்நிலைப் பரிட்சை	87
2	இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகம்	DIPCA 2018/2019 மீள் அமர்வுப் பரீட்சை	02
3	இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகம்	இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவக அத்தாட்சிப்படுத்தப்பட்ட ஓட்டுநர்களுக்கான டிப்ளோமா பரீட்சை	12
4	இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகம்	இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவக அத்தாட்சிப்படுத்தப்பட்ட கா.காசே இற்கான டிப்ளோமா பரீட்சை	04
5	இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகம்	2019 1 ஆவது உள்ளீர்ப்பு மட்டம் II ஆங்கில பரீட்சை	46
6	இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகம்	MPM 2017-2019 தவணை (VI) பரீட்சை	85
7	இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகம்	MPM 2018-2020 தவணை (VI) பரீட்சை	75

வெளிவாரிப் பரீட்சைகள்

தொ. இல.	பிரிவு	பரீட்சையின் பெயர்	பரீட்சாத்திகளின் எண்ணிக்கை
01	பொது நிருவாக மற்றும் முகாமைத்துவ அமைச்சு	தரம் III வகுப்பு 3 இற்கான வினைத்திறன் காண் தடைதாண்டற் பரீட்சை – இலங்கை தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப சேவை	224
		தரம் II வகுப்பு 3 இற்கான வினைத்திறன் காண் தடைதாண்டற் பரீட்சை – இலங்கை தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப சேவை	151
		தரம் I வகுப்பு 3 இற்கான வினைத்திறன் காண் தடைதாண்டற் பரீட்சை – இலங்கை தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப சேவை	21
		தரம் II வகுப்பு 2 இற்கான வினைத்திறன் காண் தடைதாண்டற் பரீட்சை – இலங்கை தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப சேவை	56

		தரம் I வகுப்பு 2 இற்கான வினைத்திறன் காண் தடைதாண்டற் பரீட்சை – இலங்கை தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப சேவை	11
		தரம் III வகுப்பு 1 இற்கான வினைத்திறன் காண் தடைதாண்டற் பரீட்சை – இலங்கை தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப சேவை	13
		தரம் II வகுப்பு 1 இற்கான வினைத்திறன் காண் தடைதாண்டற் பரீட்சை – இலங்கை தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப சேவை	2
		தரம் I வகுப்பு 1 இற்கான வினைத்திறன் காண் தடைதாண்டற் பரீட்சை – இலங்கை தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப சேவை	0
02	அரசாங்க அச்சக திணைக்களம்	உதவி அரசாங்க அச்சக நிறைவேற்றுத்தர உத்தியோகத்தர்களுக்கான முதலாவது வினைத்திறன் காண் தடைதாண்டற் பரீட்சை	2
03	கலாசார அலுவல்கள் திணைக்களம்	சிங்கள அகராதி அலுவலக மற்றும் சிங்கள கலைக்களஞ்சிய அலுவலக உத்தியோகத்தர்களுக்கான தரம் II வினைத்திறன் காண் தடைதாண்டற் பரீட்சை	7
04	பாதுகாப்பு அமைச்சு	சட்ட அலுவலர்களுக்கான 1 ஆவது வினைத்திறன் காண் தடைதாண்டற் பரீட்சை	1
05	உயர் கல்வி, தொழில்நுட்பம் மற்றும் புத்தாக்க அமைச்சு	சட்ட அலுவலர்களுக்கான 1 ஆவது வினைத்திறன் காண் தடைதாண்டற் பரீட்சை	1
06	அஞ்சல் மற்றும் கப்பற் துறை அமைச்சு	சட்ட அலுவலர்களுக்கான 1 ஆவது வினைத்திறன் காண் தடைதாண்டற் பரீட்சை	1
07	பொது நிருவாக மற்றும் முகாமைத்துவ அமைச்சு	அனைத்து நாடளாவிய சேவைகள் உத்தியோகத்தர்களுக்கான 1 ஆவது & 2 ஆவது வினைத்திறன் காண் தடைதாண்டற் பரீட்சை	994



09. தகவல் தொழில்நுட்ப நிலையம்

பயிற்சி மற்றும் ஆலோசனைச் சேவைகளூடாக அரச துறை நிறுவனங்களுக்கு அவைகளின் தகவல் தொழில்நுட்பத் திறன்களை அபிவிருத்தி செய்வதற்கு ஒத்துழைப்பினை வழங்குவது இந் நிலையத்தின் குறிக்கோளாகும். கொவிட் 19 தொற்றுப் பரவல் காரணமாக இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகம் கட்டாய மற்றும் திறன்களைக் கட்டியெழுப்புதல் நிகழ்ச்சித்திட்டத்திற்கு மாத்திரம் அதன் பயிற்சி நிகழ்ச்சிகளை மட்டுப்படுத்திக்கொண்டது. இவ் வருடத்தின் போது இந் நிலையம் கட்டாய மற்றும் திறன்களைக் கட்டியெழுப்புதல் நிகழ்ச்சித்திட்டத்திற்கான ஏழு பாடவிதான நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்தியுள்ளது. இந் நிகழ்ச்சிகள் நிகழ்நிலை தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி நடாத்தப்பட்டிருந்தது. நிகழ்நிலை அமர்வுகளை நடாத்துவதற்கு நாம் மைக்ரோ சாப்ட் டீம் மென்பொருளைப் பயன்படுத்தியிருந்தோம். சுகாதார அதிகார சபையினால் வழங்கப்பட்ட பின்வரும் வழிகாட்டல்களைப் பின்பற்றி "வீட்டிலிருந்து வேலை முறை" ஊடாக பெரும்பாலான விரிவுரைகள் நடாத்தப்பட்டது. இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகத்தின் பயன்பாட்டிற்காக இலவசமாக மைக்ரோ சாப்ட் கம்பெனியினால் மைக்ரோ சாப்ட் டீம் மென்பொருள் வழங்கப்பட்டது.

இக் காலப்பகுதியில் நான்கு முகாமைத்துவ ஆலோசனை மதிப்பீடு மற்றும் மூன்று மென்பொருள் தொடர்பான நிகழ்ச்சித்திட்டங்கள் பூர்த்தி செய்யப்பட்டதுடன் அவை தொடர்பான விபரங்கள் கீழுள்ள அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன.

2020 ஆம் ஆண்டு சனவரி – திசம்பர் காலப்பகுதியில் நடாத்தப்பட்ட கட்டாய மற்றும் திறன்களைக் கட்டியெழுப்புதல் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள்

இல	நிகழ்ச்சித்திட்டத்தின் பெயர்	நாட்களின் எண்ணிக்கை	இலக்கு நிகழ்ச்சித்திட்டங்களின் எண்ணிக்கை	நடாத்தப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்களின்	பங்குபற்றுநர்களின் எண்ணிக்கை	பங்குபற்றிய நாட்களின் எண்ணிக்கை
1.	இலங்கை தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப சேவை வகுப்பு II- தரம் II இற்கான கட்டாய பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் திறந்த மற்றும் மட்டுப்படுத்தப்பட்ட (தொகுதி 01)	13	03	01	30	390
2.	இலங்கை தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப சேவை வகுப்பு ஐஐ- தரம் I இற்கான கட்டாய பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் திறந்த மற்றும் மட்டுப்படுத்தப்பட்ட (தொகுதி 02)	01	02	01	29	29
3.	செயல்நுணுக்க தலைவர்களுக்கான திறக் விருத்தி விவாத நிகழ்ச்சித்திட்டம் (இலங்கை நிருவாக சேவை தரம் I உத்தியோகத்தர்கள்) - குழு C இலத்திறனியல் அரசாங்கம் பற்றிய பாடவிதானம்	02	01	01	38	76

4.	செயல்நுணுக்க தலைவர்களுக்கான திறக் விருத்தி விவாத நிகழ்ச்சித்திட்டம் (இலங்கை நிர்வாக சேவை தரம் I உத்தியோகத்தர்கள்) - குழு B இலத்திறனியல் அரசாங்கம் பற்றிய பாடவிதானம்	02	01	01	32	64
5.	இலங்கை நிருவாக சேவை தரம் III (2012) இற்கான திறன்களைக் கட்டியெழுப்புதல் – இலத்திரனியல் அரசாங்கம் மற்றும் பாதுகாப்பு பற்றிய பாட விதானம் – இலத்திரனியல் கற்கை	05	03	03	135	675
	மொத்தம்	23	10	7	264	1234

சனவரி – திசம்பர் 2020 காலப்பகுதியில் நடாத்தப்பட்ட நிகழ்நிலை பரீட்சைகள்

இல.	பரீட்சைகள்	பரீட்சாத்திகளின் எண்ணிக்கை
1.	இலத்திரனியல் அரசாங்கம் மற்றும் பாதுகாப்பு பாடவிதான பரீட்சைகள் இ.நி.சே III 2012 CBP குழு அ - 2020.02.26	40
2.	இலத்திரனியல் அரசாங்கம் மற்றும் பாதுகாப்பு பாடவிதான பரீட்சைகள் இ.நி.சே III 2012 CBP குழு இ - 2020.11.10	47
3.	இலத்திரனியல் அரசாங்கம் மற்றும் பாதுகாப்பு பாடவிதான பரீட்சைகள் இ.நி.சே III 2012 CBP குழு ஆ 2020.11.19	44

2020 சனவரி – திசம்பர் காலப்பகுதியில் ஏனைய நிறுவனங்களுக்கான த.தொ.தொ ஆய்வுகூடம்

இல.	நிகழ்ச்சித்திட்டம் மற்றும் நிறுவனத்தின் பெயர்	நாட்களின் எண்ணிக்கை	பெறப்பட்ட தொகை ரூபாயில்
1.	பாராளுமன்றத் தேர்தல் 2020 – தேர்தல் ஆணைக்குழு உத்தியோகத்தர்களுக்கான பயிற்சி	1	125,000.00
2.	கொழும்பு மாநகரசபை தேர்தல் அலுவலகத்தினால் தேர்தல் பெறுபேறு அட்டவணைப் பயிற்சிக்கான கணனி வசதிகளைப் பெறல்	1	49,000.00
3.	கொழும்பு மாநகரசபையினால் நடாத்தப்பட்ட பெயர்வழிக் கோவை கணனி மயப்படுத்தப்பட்டல் நிகழ்ச்சித்திட்டம்	1	49,000.00
	மொத்தம்		**223,000.00**

2020 சனவரி – திசம்பர் வரையான காலப்பகுதியில் மேற்கொள்ளப்பட்ட முகாமைத்துவ ஆலோசனை மதிப்பீடு

இல.	நிறுவனம்	தலைப்பு	காலப்பகுதி	பெறுமதி ரூபாயில்
1	தெஹிவளை கல்கிசை மாநகரசபை	ERP முறை – பகுதி ஒன்றின் கண்காணிப்பு மதிப்பீடு	சனவரி - திசம்பர் 2020	ரூ.317,511.25

2	கொழும்பு மாநகரசபை	த.தொ.தொ விண்ணப்பங்கள் மற்றும் உட்கட்டமைப்பின் கண்காணிப்பு மதிப்பீடு	ஜூன்- திசம்பர் 2020	ரூ. 1,803,378.34
3	கொழும்பு மாநகரசபை	பயனாளர் தகவல் முகாமைத்துவ முறைமை	மார்ச் - திசம்பர் 2020	ரூ. 605,044.44
4	உரச் செயலகத் திணைக்களம் (விவசாய அமைச்சு)	உர முகாமைத்துவ தரவுத்தளம்	செப்டம்பர்- திசம்பர் 2020	வரவு செலவுத் திட்டம் இல்லை மற்றும் இலவச சேவைள

நிறுவனத்தினுள் 2020 ஆம் ஆண்டு மென்பொருள் முறை அமுலாக்கம்

மென்பொருளின் பெயர்


1. மென்பொருள் மற்றும் வன் பொருள் பராமரிப்பு முறை
2. வினைத்திறன் காண் தடைதாண்டற் பரீட்சைக்கான நிகழ்நிலை அனுமதி செயன்முறை முறைமை
3. இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகப் பரீட்சைகளுக்கான முகாமைத்துவ முறைமையை ஆட்சேர்ப்புச் செய்தல்

வகுப்பறைப் புத்தாக்கம்

கணனி ஆய்வு கூடம் 2 மற்றும் 3 இவ் வருடத்தில் பூர்த்திசெய்யப்பட்டது.

வன்பொருள் திருத்தம்

இக் காலப்பகுதியில் இருபத்தைந்து கைவிடப்பட்ட NEC திரைக்கணனிகள் (NEC desktop machines) இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகத்தினால் திருத்தியமைக்கப்பட்டது.



10. மொழிக் கற்கைகள் நிலையம்

கீழ் குறிப்பிட்டவாறாக 2020 ஆம் ஆண்டு காலப்பகுதியில் 200 இற்கு மேற்பட்ட உத்தியோகத்தர்களுக்கான ஆங்கில மொழிக் கற்கைகளை மொழிக் சுற்கைகளுக்கான நிலையம் நடாத்தியிருந்தது.



தமது வேலைத்தளங்களில் வாய்மொழி மற்றும் எழுத்துமூல தொடர்பாடலில் ஆங்கில மொழியை தன்நம்பிக்கையுடன் பயன்படுத்துவதற்கு அரச உத்தியோகத்தர்களின் ஆங்கில மொழித் தொழில்வாண்மை விருத்தி மீது இக் கற்கைகள் கவனஞ்செலுத்துகின்றது. பேச்சுத் திறன் பயிற்சி நிகழ்ச்சி விசேடமாக பங்குபற்றுநர்கள் தமது பகிரங்கப் பேச்சாற்றலை முறையொன்றின் கீழ் விருத்திசெய்வதற்கு பயிற்சி வழங்கப்படுகிறது. தொழில் காரணங்களுக்கான ஆங்கிலத்தில் சான்றிதழ் கற்கைநெறி மற்றும் இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவக ஆங்கிலத்தில் டிப்ளோமா ஆகிய கற்கைநெறிகள் வேறுபட்ட சூழமைவுகளில் உத்தியோகபூர்வ தொடர்பாடலை ஆங்கிலத்தைப் பயன்படுத்தி அனைத்து நான்கு திறன்களையும் விருத்திசெய்வதில் கவனஞ்செலுத்துகின்றது.



2020 ஆம் ஆண்டின் CLS செயலாற்றுகை

கற்கைநெறியின் பெயர்	மட்டம்	பங்குபற்றுநர் எண்ணிக்கை	ஆரம்ப திகதி	காலப்பகுதி
ஆங்கிலத்தில் இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவக டிப்ளோமா 2018 - 2ஆவது உள்ளீர்ப்பு	மட்டம் III	20	2018.12.29	1 வருடம்
ஆங்கிலத்தில் இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவக டிப்ளோமா 2019 - 2ஆவது உள்ளீர்ப்பு	மட்டம் II மற்றும் III	44	2019.09.07	1 வருடம்
CEEP 2019 1ஆவது உள்ளீர்ப்பு	உயர்	25	2020.02.16	12 நாட்கள்
CEEP 2019 1ஆவது உள்ளீர்ப்பு	ஆரம்ப	25	2020.02.16	12 நாட்கள்
இ.வி.சே மற்றும் இ.க.க.சே உத்தியோகத் தர்களுக்கான பேச்சுத் திறன் பயிற்சி		30	2019.12.27	10 நாட்கள்
புள்ளிவிபரவியலாளர்களுக்கான கட்டாய பயிற்சி நிகழ்ச்சி – புள்ளிவிபரவியலாளர் திணைக்களம்		45	24.08.2020	7 நாட்கள்

11. பொது நிருவாக

11.1 பணிக்குழு முகாமைத்துவம்

2020.12.31 ஆம் திகதி உள்ளவாறான பணிக்குழு விபரங்கள்

	அனுமதிக்கப்பட்ட பணிக்குழு	தற்போதுள்ள பணிக்குழு	வெற்றிடங்கள்
சிரேஸ்ட	47	19	28
மூன்றாம் நிலை	24	12	12
இரண்டாம் நிலை	54	44	10
ஆரம்ப நிலை	41	29	12
மொத்தம்	166	104	62

11.2 மனிதவள முகாமைத்துவம்

11.2.1. இரண்டாம் நிலை மற்றும் நிரந்தர அடிப்படையில் பின்வரும் பதவிகள் பூர்த்தியாக்கப்பட்டுள்ளன

தொ/இ	பதவி	நிரப்பப்பட்டுள்ள பதவிகளின் எண்ணிக்கை	ஆட்சேர்ப்பு அடிப்படை
01	பணிப்பாளர் நாயகம் (பதில்.)	01	இரண்டாம் நிலை
02	பணிப்பாளர் (நிர்வாகம்)	01	இரண்டாம் நிலை
03	ஆலோசகர்	01	இரண்டாம் நிலை
04	முகாமைத்துவ உதவியாளர்	03	இரண்டாம் நிலை

12.1.2. ஓய்வுபெறல், பதவி விலகல், இடமாற்றம் மற்றும் இரண்டாம் நிலை காலப்பகுதி முடிவடைதல் ஆகியவற்றின் காரணமாக பின்வரும் பதவிகள் வெற்றிடமாகியுள்ளன.

தொ/இ	பதவி	பதவி வெற்றிடங்களின் எண்ணிக்கை	வெற்றிடத்திற்கான காரணம்
01	பணிப்பாளர் நாயகம் (பதில்.) மேலதிக பணிப்பாளர் நாயகம் (பயிற்சி மற்றும் கற்றல்)	01	இடமாற்றம்
02	நிர்வாக உத்தியோகத்தர்	01	ஓய்வுபெறல்
03	நிகழ்ச்சித்திட்ட உத்தியோகத்தர்	02	இடமாற்றம் / ஓய்வுபெறல்
04	நிதி உத்தியோகத்தர்	01	ஓய்வுபெறல்
05	முகாமைத்துவ உதவியாளர்	02	இடமாற்றம்
06	அலுவலக உதவி	02	ஓய்வுபெறல் / பதவி விலகல்

11.3. ஏற்பாட்டியல் முகாமைத்துவம்

இந் நிறுவகத்தின் பின்வரும் பகுதிகள் மீளாய்வின் கீழ் இவ் வருட காலப்பகுதியில் மீளப்புதுப்பிக்கப்பட்டுள்ளன.

இல.	பெறுகையின் வகை	செயற்திட்டத்திற்கான மதிப்பிடப்பட்ட மொத்த தொகை - (ரூ.மில்லியன்)	உண்மையாக செலுத்தப்பட்டது பெறுமதி ரூ.
	மூலதனச் சொத்துக்களின் புனருத்தாரணம் மற்றும் விருத்தி		
	கட்டிடங்கள் மற்றும் கட்டமைப்புகள்		
1	விடுதித் தளத் தொகுதியின் புத்தாக்கம்(G-B)	0.94	939,644.70
2	த.தொ கூடத்தின் புத்தாக்க மீதி வேலைகள்	1.26	1,257,647.10
3	த.தொ கூடத்தின் புத்தாக்க மீதி வேலைகள்	1.19	1,184,414.44
4	னுபு அலுவலகத்திற்கான சரக்கு அலுமாரியை (Pantry Cupboard) புதுப்பித்துப் பொருத்துதல்	0.22	211,356.00
5	நுலரெலியா சுற்றுலா பங்களாவில் வடிகான்களைப் புதுப்பித்தல்	0.33	439,983.00
6	விடுதி அறைகளைப் புதுப்பித்தல்	0.03	24,873.01
	மூலதனச் சொத்துக்களைக் கையகப்படுத்தல்		
	பொறி, இயந்திரம் மற்றும் உபகரணங்களைக் கையகப்படுத்தல்		
7	வெளியக வன் தட்டுக்கள் 5 இனைக் கொள்வனவு செய்தல்	0.09	64,500.00
8	வன் தட்டுக்களைக் கொள்வனவு செய்தல்		11,000.00
9	கணனி அச்சுப் பொறிக் கொள்வனவு செய்தல் (01)		29,950.00
	அலுவலக உபகரணங்களை கையகப்படுத்தல்		
10	கண்ணகாணிப்புக் கமரா விநியோகம் மற்றும் பொருத்துதல்	1.68	1,594,780.00
11	புத்தக ஸ்கனர் இயந்திரத்தைக் கொள்வனவு செய்தல் (01)		79,000.00
12	காட்சிப்படுத்தல் தொலைபேசியை கொள்வனவு செய்தல்		4,990.00
	இலத்திரனியல் உபகரயங்களைக் கையகப்படுத்தல்		
13	SPS இற்கான காற்று சீரமைப்பியினைக் கொள்வனவு செய்தல் (01)	0,27	121,500.00
14	சேவையக அறைக்கான காற்று சீரமைப்பியினைக் கொள்வனவு செய்தல் (01)		316,656.00
15	கூரை மின்விசிறி (10) மற்றும் தள மின்விசிறி (05) கொள்வனவு செய்தல்		139,141.80
	மென்பொருள் கையகப்படுத்தல்		
16	வைரஸ் தடுப்பு தீர்மானங்களை விநியோகித்தல் மற்றும் நிறுவுதல்	0.80	400,000.00
	ஏனையவைகள்		
17	புத்தகங்கள் மற்றும் இலத்திரனியல் பொருட்களைக் கொள்வனவு செய்தல்	0.15	125,009.95

18	ஒலிபெருக்கிக் கொள்வனவு செய்தல்		3,500.00
19	தூரிகை வெட்டும் இயந்திரத்தை கொள்வனவு செய்தல்		15,500.00
20	தேனீர் கூடாக்கியைக் கொள்வனவு செய்தல்		56,090.00
21	ஏணிக் கொள்வனவு		10,500.00
22	குளிர் நீர் கிண்ணக் கொள்வனவு		86,138.64
23	கனமான கடமைக்கான ஸ்டெப்ளர் இயந்திரத்தைக் கொள்வனவு செய்தல்	0,19	4,750.00
24	வெப்கம் கொள்வனவு செய்தல் (02)		3,802.50
25	தோட்டத்திற்கு நீர் பாய்ச்சும் தொகுதியைக் கொள்வனவு செய்தல்		5,800.00
26	நுவரெலியா சுற்றுலா பங்களாவிற்கான நீர் பாய்ச்சும் தொகுதியைக் கொள்வனவு செய்தல்		3,500.00
27	பாதத்தினால் தொழிற்படும் சிங் கௌவனவு- 02		21,600.00
28	அட்டைக் கொள்வனவு		2,200.00
	மொத்த தொகை		**7,157,827.14**



12. கலாநிதி. எச். எஸ். வனசிங்க நூலகம் - இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகம்

இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவக நூலகமும் தமது ஊழியர்களின் பயிற்சியில் பங்குபற்றுகின்ற அரச/ தனியார் துறை நிருறவேற்றுநர்களின் தகவற் தேவையைப் பூர்த்திசெய்வதற்கு உதவுகின்றது. இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவக நுலகம் பொது நிர்வாகம் மற்றும் முகாமைத்துவம் தொடர்பான கல்விசார் துறைகளில் புதிய புத்தகங்களை விசேடமாக தமது பாவனையாளர்களின் கல்விசார் தேவைகளைப் அதிகளவில் பூர்த்தி செய்வதற்கான புதிய புத்தகங்களை அதிகளவில் கொண்டுள்ளது.

இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகம் புதிய பயிற்சிக் கற்கை நெறிகளை அறிமுகப்படுத்துவதிலும் உள வள ஆலோசனை மற்றும் ஆய்வு நடவடிக்கைகளை அமுல்படுத்துவதிலும் ஈடுபடுவதுடன் இந் நூலகம் தேவையான தகவலைப் பெற்றுக்கொள்வதற்கும் வசதிபடுத்துகின்றது.

உள்ளடக்கப்படும் விடயப்பரப்பு

அரசாங்கக் கொள்கை, நல்லாட்சி, ஆளுமை அபிவிருத்தி, பொருளாதார அபிவிருத்தி மற்றும் திட்டமிடல், சூழல் முகாமைத்துவம், செயலாற்றல் அபிவிருத்தி, உற்பத்தித் திறன், செயற்திட்ட முகாமைத்துவம், மனிதவள முகாமைத்துவம், உலகமயமாதல், தனியார்மயப்படுத்துகை, இலத்திரனியல் அரசாங்கம் மற்றும் இலத்திரனியல் ஆட்சி, மற்றும் இலத்திரனியல் வியாபார நிலைபேண் அபிவிருத்தி சேவைகள் ஆகியன இந் நூலகத்தினால் வழங்கப்படுகின்றன.
இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகத்தின் நூலகம் திங்கட்கிழமை முதல் சனிக்கிழமை வரை மு.ப 7.30 தொடக்கம் பி.ப 7.30 வரை உசாத்துணைச் செயற்பாடுகளுக்காகத் திறந்திருக்கும். ஞாயிற்றுக்கிழமை மற்றும் பொது விடுமுறை நாட்களில் இந் நூலகம் மூடப்படும். இலங்கையில் கற்றல், கற்பித்தல் மற்றும் ஆய்வு நடவடிக்கைகளுக்கு உதவுகிறது. இந் நூலகத்தைப் பற்றிய தகவல் நூலக விபரப் புத்தகம், பைலட் அட்டவணை ஆகியன மற்றும் நூலக ஊழியர்களின் உதவி ஆகிய கருவிகளைப் பயன்படுத்தி நிகழ்நிலைத் தரவுத்தளத்துனூடாக கண்டுபிடிக்கப்படலாம்.

அதற்கு மேலதிகமாக சுய கற்றல், மடிக் கணனி, இலத்திரனியல் அச்சு சேவைகள் மற்றும் நூலகப் பயன்பாடு ஆகிய வசதிகள் வழங்கப்படும். நூலகப் பருமாற்றங்களூடாக ஏனைய நூலகங்களிலிருந்து பெறப்படுகின்ற புத்தகங்கள் மற்றும் பத்திரிகைகள் இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவக நூலகத்தில் காணப்படமாட்டாது. தகவல் வளங்களின் தேவைப்படுத்தப்படும் பாதுகாப்பு மட்டத்தை பராமரிப்பதற்கு கண்காணிப்பு கமராக்கள் பொருத்தப்பட்டுள்ளன. டிஜிட்டல் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி தரம் மற்றும் வினைத்திறனுடன் அச்சு மேற்கொள்ளப்படுகின்றது. தன்னியக்க நூலக செயற்பாடுகளுக்கு COHA மென் பொருளைப் பயன்படுத்தித் தொகுக்கப்பட்ட தரவுத்தளமொன்றினுள் உசாத்துணைத் தகவல்கள் கூட்டிணைக்கப்பட்டுள்ளன.

உறுப்பாண்மையுடன் நூலகப் பயன்பாடு

2020 மார்ச் மாதத்திலிருந்து இந் நாட்டின் கொவிட் 19 நோய்தொற்றின் காரணமாக இந் நிறுவனத்தின் கற்கைகளும் மட்டுப்படுத்தப்பட்டு நூலகப் பயன்பாடும் மட்டுப்படுத்தப்பட்டது. இந் நூலகம் இந் நிறுவகத்தின் ஊழியர்களுக்கு மட்டும் திறந்து காணப்படுவதுடன் வெளிப் பாவனையாளர்களின் தகவல் தேவைப்பாடுகள் அவர்களின் வேண்டுகோளின் பிரகாரம் ஸ்கன் செய்யப்பட்டு மின்னஞ்சலினூடாக அனுப்பப்பட்டது. 2020 ஆம் ஆண்டு 242 பாவனையாளரைக் கொண்டிருந்தது. பெறப்பட்ட நூலக உறுப்பாண்மை மற்றும் விபரங்கள் பின்வருமாறு.

தொடர் இல.	கற்கைத் தலைப்பு	எண்ணிக்கை
1.	அரச முகாமைத்துவ முதுமாணிப் பட்டக் கற்கை	03
2.	பெறுகைச் செயன்முறையில் உயர் டிப்ளோமா	96*
3.	அலுவலக முகாமைத்துவத்தில் டிப்ளோமா	31
4.	இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகத்தின் ஊழியர்கள்	112**
	மொத்தம்	242

* ஏப்ரல் மாதத்திலிருந்து நிகழ்நிலை மூலம் இக் கற்கை நடாத்தப்பட்டுள்ளதுடன் பயிற்சியாளர்கள் இந் நிறுவகத்திற்கு கமுகமளிக்காமையினால் உறுப்பாண்மை உரிமம் வழங்கப்படவில்லை.

** புதிய இலத்திரனியல் நூலக உறுப்பாண்மை உரிமம் இந் நிறுவகத்தின் ஊழியர்களுக்காகத் தயாரிக்கப்பட்டுள்ளது.

உறுப்பாண்மை இன்றிய நூலகப் பாவனை

உறுப்பாண்மை இன்றிய நூலகப் பாவனையும் இவ் வருடத்தின் குறுங்கால கற்கைகளுக்கு மட்டுப்படுத்தப்பட்டுள்ளமையினால் மிகக் குறைவானதாகும்.

நூலகத் தகவல் வளங்களைப் பெற்றுக்கொள்ளல

புத்தகங்கள்

நன்கொடையாகப் பெறப்பட்ட புத்தகங்களின் எண்ணிக்கை பின்வருமாற

- ஆதரவாளராக - 64
- விசேட நன்கொடை - 12

2020 ஆம் ஆண்டில் நூலகத் தகவல் வளங்கள் மூலம் பெறப்பட்ட பெறுமதி பின்வருமாறு

கொள்வனவுப் பொருட்கள்	பெறுமதி
புத்தகங்கள்	152,943.30
பத்திரிகைகள் (உள்ளூர்)	1,800.00
பத்திரிகைகள் (கடல்கடந்த)	24,084.00
செய்தித் தாள்	166,970.00
மொத்தம்	345,797.00

இவ் வருட நவம்பர் மாதத்தில் நூலகப் புத்தக அளவை இந் நிறுவகத்தின் நிருவாகப் பிரிவினால் நடாத்தப்பட்டது.



13. 2020 ஆம் ஆண்டின் இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகத்தின் விசேட நிகழ்வுகள்

01. கெதன ரடக் வடென கசக் – 2020 சனவரி 01 ஆம் திகதி

இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவக "கெதன ரடக் வடென கசக்" தேசிய மர நடுகை இயக்கத்தின் கரு பொருளின் அடிப்படையில் பணிப்பாளர் நாயகம் மற்றும் உத்தியோகத்தர்கள் 2020 சனவரி 01 ஆம் திகதி மு.ப. 9.49 மணிக்கு இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகத்தின் தேட்டத்தில் பல்வேறுபட்ட பெறுமதியான மரங்களையும் பழ மரங்களையும் நட்டனர். திரு.கே. ஆர். கங்காதார, சிரேஸ்ட ஆலோசகர், திரு.வை. அநிருத்தனன் பணிப்பாளர் (நிருவாகம்), திரு. பிரசாத் பியசேன, மேலதிகப் பணிப்பாளர் நாயகம் (நிருவாகம் மற்றும் நிதி), திரு. சுதத் அல்விஸ் ஆகியோரடங்கிய இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகத்தின் பசுமைக் குழுவினால் இந் நிகழ்வு ஒழுங்குசெய்யப்பட்டது.



02. அரச விரிவுரைகள்


இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகத்தின் பட்டப்பின் படிப்பு கற்கைகள் கல்லூரி 2020 சனவரி 16 ஆம் திகதி இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவக கேட்போர் கூடத்தில் "நிர்வாகத் தீர்மானங்களை மேற்கொள்ளுதல் – மனித உரிமையினூடான பார்வை" பற்றிய அரச விரிவுரையொன்று நடாத்தப்பட்டது. பட்டப்பின் படிப்பு கற்கைகள் கல்லூரியினால் நடாத்தப்படத் திட்டமிடப்பட்டிருந்த விரிவுரைத் தொடர்களில் 1 ஆவது விரிவுரை இதுவாகும். கலாநிதி. பிரதீபா மஹானாமகேவா, சட்டப் பேராசிரியர், சட்டப் பீடாதிபதி, சட்ட பீடம், ஜமைக்கா தொழில்நுட்ப பல்கலைக்கழகம், மேற்கிந்திய தீவுகள், அவர்கள் விரிவுரையாளராவார்.





03. "தனியார் துறை சிறப்பு செயற்பாடுகள்: அரச துறைக்கான கற்பித்தல்கள்" பற்றிய சிறப்பு விரிவுரை

பட்டப்பின் படிப்பு கற்கைகள் கல்லூரி 2020 பெப்ரவரி 13 ஆம் திகதி சங்கதனி மண்டபத்தில் "தனியார் துறை சிறப்பு செயற்பாடுகள்: அரச துறைக்கான கற்பித்தல்கள்" பற்றிய அரச விரிவுரையொன்று ஒழுங்குபடுத்தப்பட்டிருந்தது. பட்டப்பின் படிப்பு கற்கைகள் கல்லூரியினால் நடாத்தப்படத் திட்டமிடப்பட்டிருந்த விரிவுரைத் தொடர்களில் 2 ஆவது விரிவுரை இதுவாகும். இவ் விரிவுரை திரு. திலக் பியதிகம, பிரதம நிறைவேற்று உத்தியோகத்தர், எஸ்டிபி வங்கி, அவர்களினால் நடாத்தப்படும்.







04. இலங்கை திட்டமிடல் சேவை உத்தியோகத்தர்கள் தமது புதிய நியமனங்களைப் பெற்றனர்

இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகத்தில் தமது கட்டாய பயிற்சியை நிறைவு செய்த இலங்கைத் திட்டமிடற் சேவையின் புதிதாக நியமிக்கப்பட்ட 75 உத்தியோகத்தர்கள் தமது நியமனக் கடிதங்களை 2020 பெப்ரவரி 07 ஆம் திகதி பொது நிர்வாக, உள்நாட்டு அலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர் கௌரவ. ஜனக பண்டார தென்னகோன் அவர்களிடமிருந்து பெற்றுக்கொண்டனர். இவ் வைபவம் இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகத்தின் "சன்கிந்த" கேட்போர் கூடத்தில் மு.ப 11.00 மணியிலிருந்து நடாத்தப்பட்டது. அமைச்சின் செயலாளர் திரு. எஸ். ஹெட்டியாராய்ச்சி, மேலதிக செயலாளர்கள், இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகத்தின் பணிப்பாளர் நாயகம் மற்றும் பீட உறுப்பினர்கள் இந்த நிகழ்வில் பங்குபற்றியிருந்தனர்.

இக் கட்டாய பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் ஒரு மாத காலத்திற்கு அமைச்சு, மாகாண, மாவட்ட மற்றும் பிரதேச மட்டம் ஆகியன இணைந்த துறை மற்றும் வெளிப் பயிற்சி உள்ளடங்கலாக தொடர்ந்து 06 ½ மாதங்கள் 17 பாட விதானங்களை உள்ளடக்கியிருந்தது.

அமைச்சின் செயலாளர் திரு. எஸ்.கெட்டியாராச்சி திட்டமிடல் உத்தியோகத்தர்கள் நாட்டின் அனைத்து அபிவிருத்தி வேலைகளுக்கும் நம்பிக்கையுடையவராக இருப்பதுடன் பொது மக்களின் நலனுக்காக பொது நிதியினைப் பயன்படுத்துவதற்கான பெறுப்பினையும் தனது உரையில் வலியுறுத்தியிருந்தார். மேலும் நிலைபேண் அபிவிருத்தி திட்டமிடலுக்கான கவனஞ்செலுத்தப்படல் வேண்டும் என அவர் குறிப்பிட்டிருந்தார். இக் கட்டாய பயிற்சி நிகழ்ச்சித்திட்டத்திற்கு முழுமையான ஒருங்கிணைப்பாளராக இருந்த இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகத்தின் பணிப்பாளர் நாயகம் (பதில்) திருமதி. கே. எம். எஸ். டி ஜயசேகர மற்றும் சிரேஸ்ட ஆலோசகர் திருமதி. நிரஞ்சலா ஜயசுந்தர ஆகியோரும் இக் கூட்டத்தில் உரையாற்றியிருந்தனர்.









05. கொவிட் 19 தொற்று நோய் காலப்பகுதியில் அரச துறை முகாமையாளரின் வகிபங்கு பற்றிய வெப்பினார்

பட்டப்பின் படிப்பு கற்கைகள் கல்லூரி 2020 மே 6 ஆம் திகதி கொவிட் 19 தொற்றுநோய் காலப்பகுதியில் அரச துறை முகாமையாளரின் வகிபங்கு பற்றிய வெப்பினார் ஒன்றை ஒழுங்குபடுத்தியிருந்தது. பட்டப்பின் படிப்பு கற்கைகள் கல்லூரியினால் 2020 ஆம் ஆண்டு காலப்பகுதியில் நடாத்தப்பட வேண்டித் திட்டமிடப்பட்டிருந்த விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டத்தின் 3 ஆவது தொடர் இதுவாகும். பட்டப்பின் படிப்பு கற்கைகளுக்கான மேலதிக பணிப்பாளர் நாயகம் (பதில்) கலாநிதி. சேபாளி சுதசிங்க அவர்களினால் இவ் வெப்பினால் மெருகூட்டப்பட்டிருந்தது.



06. நோய்த்தொற்று சகாப்தத்தில் தடையற்ற சேவைகளுக்கான ஏற்பாடு

இக் காலப்பகுதியில் கொவிட் 19 நோய்தொற்று அழிவடையும் வரை மக்களைப் பாதுகாப்பதன் பொருட்டு அரசாங்கத்தின் செயற்பாடுகளுக்கு உதவுவதற்கும் அரச சேவையின் திறனை விருத்தி செய்வதற்கும் பல்வேறான நடவடிக்கைகள் இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகத்தினால் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

- மிக ஆரம்பத்தில் உயிரைப் பாதுகாக்கும் நடவடிக்கைகளுக்காக அரசாங்க வைத்தியசாலைகளில் தமது நேரத்தை அர்ப்பணித்த வைத்திய உத்தியோகத்தர்கள் பயன்படுத்துவதற்காக முழுமையான விடுதித் தொகுதியொன்றை இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகம் ஒதுக்கியுள்ளது.

- இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகத்தின் அனைத்து உத்தியோகத்தர்களும் நோய்த்தொற்றிலிருந்து மக்களைப் பாதுகாப்பது பற்றிய தேசிய செயற்பாட்டிற்காக அதிமேதகு சனாதிபதியினால் எழுப்பப்பட்ட நிதிக்கு தமது ஒரு நாள் வேதனத்தை நன்கொடையாக வழங்கியுள்ளனர்.

- சுகாதார அமைச்சினால் வழங்கப்பட்ட அனைத்து வழிகாட்டல்களும் கடுமையாகப் பின்பற்றப்பட்டுள்ளமையை உறுதிசெய்யும் பொருட்டு அரசாங்க உத்தியோகத்தர்களுக்கு பயிற்சியளிப்பது தொடர்பான தனது செயற்பாடுகளையும் ஆரம்பித்திருந்தது. அச் செயற்பாடுகளை ஆரம்பிப்பதற்கு முன்னர் இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகம் கொழும்பு மாநகர சபையின் ஒத்துழைப்பில் தனிமைப்படுத்தற் செயன்முறை பற்றிய அனைத்து நடவடிக்கைகளையும் பின்பற்றியிருந்தது.

- ஆரம்பத்தில் வைத்திய உத்தியோகத்தர்கள் விடுதி வளாகத்தை விட்டு வெளியேறும் வரை அனைத்து பீட மற்றும் முகாமைத்துவ உத்தியோகத்தர்களும் நிகழ்நிலை மூலம் கடமையாற்றியிருந்தனர். அதன்பின்னர் செவ்வாய்க்கிழமை மற்றும் வியாழக்கிழமை ஆகிய வாரத்தின் இரு தினங்களில் உத்தியோகத்தர்கள் சமூகமளித்து இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகம் தனது 50% நடவடிக்கைகளை ஆரம்பித்திருந்தது. கவனத்திற் கொள்ளக்கூடிய நிலைமையொன்றிற்கு இந் நிலைமை கட்டுப்படுத்தப்படும் வரை கிழமைக்கு நான்கு நாட்கள் இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகத்தினைத் திறக்க நாம் ஆரம்பித்தோம் அத்துடன் உடன் பணியாற்றுபவர்கள் மற்றும் கண்காணிப்பாளர்களுடனான கலந்துரையாடலின் பின்னர் அலுவலகத்திற்கு வருகை தராமல் தெரிவு செய்யப்பட்ட தினங்களுக்கு தொழிலாளர்கள் அனுமதிக்கப்பட்டனர்.

- இக் காலப்பகுதியில் இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகம் இச் சூழ்நிலையால் பாதிக்கப்பட்ட மக்களின் நலனுக்கான துறையில் தமது பெறுமதியான சேவையை வழங்கிய மாவட்ட செயலாளர்கள் மற்றும் பிரதேசச் செயலாளர்கள் போன்ற உயர் மட்ட உத்தியோகத்தர்களை ஊக்குவிக்கும் நோக்கில் வெப்பினார் அமர்வு ஒன்றை நடாத்த ஆரம்பித்திருந்தது.

- அதன் பிரகாரம் இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகம் இவ் அமர்வுகள் பற்றிய ஒருங்கிணைப்பாளர்கள் அதேபோல வளவாளர்களுக்கான வழிகாட்டல் தொகுதியொன்றை தயாரித்துள்ளது. வெப்பினார் அமர்வுகளினால் அவர்களுக்கு விழிப்புணர்வூட்டுவதற்கு பின்வரும் பகுதிகள் வேண்டப்பட்டுள்ளன.

- தொடர்ச்சியான வியாபாரத்திற்காக தொழில்முயற்சி விரிதிறன்

- இடர் முகாமைத்துவம்: பிரதேச மட்ட சிறு தொழில்முயற்சியாளர்களின் வெற்றிக்கான வழி

- பெறுபேறுகளின் அடிப்படையிலான திட்டமிடல்: பிரதேச செயலகங்க உத்தியோகத்தர்களின் வகிபங்கு

- தீர்மானம் மேற்கொள்ளலில் தரவுக்கான இலக்கமுறை பரிமாணத்தினூடாக சமூக இடைவெளியை மேம்படுத்தல்: இலங்கையின் சிறந்த அரசாங்கத்திற்கான ஏற்பாடுகள்
- அனர்த்த சூழ்நிலையொன்றில் வியாபாரத்தை தொடரல்

- கொவிட் 19 காலத்தில் நிதி ஒழுங்கைப் பராமரித்தல் – அரச சேவையை வழங்குதல்

- கொவிட் 19 நோய்த்தொற்றின் போது அரச சேவை முகாமையாளரின் வகிபங்கு. மேற்படி நிகழ்ச்சித்திட்டங்களுக்குப் புறம்பாக இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகத்தின் பட்டப்பின் படிப்பு கற்கைகள் கல்லூரி பின்வரும் மூன்று முறைகளைப் பயன்படுத்தி அரச முதுமாணி நிகழ்ச்சித்திட்டத்தை ஆரம்பித்திருந்தது.

* இலத்திரனியல் கற்றல் முறை
* மைக்ரோ சொப்ட் டீம்

* பவர் பொயின்ட் மூலமான முன்னிலைப்படுத்துகை மற்றும் கலப்பு முறைக் கற்றலைப் பயன்படுத்தி வீட்டிலிருந்நது செய்யும் ஒப்படைகள்

- இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகத்தின் பொது ஊழியர்கள் இக் காலப்பகுதியில் பின்வரும் பகுதியில் விழிப்புணர்வை அடைவதற்கான சந்தர்ப்பம் வழங்கப்பட்டது.

* தொடர்பாடல் திறன் மற்றும் பொது தொடர்புகள்
* வகுப்பறை உபகரணங்களை கையாள்வதற்கான அடிப்படைத் தேவைகள்
* கோவையைக் கையாளுதல் மற்றும் பராமரித்தல்
* அடிப்படை நிதி ஒழுங்குவிதி
* கடிதம் எழுதுதல், நினைவூட்டல், மின்னஞ்சல் எழுதுதல்
* அடிப்படை உற்பத்தி
* தகவல் தொழில்நுட்ப விண்ணப்பங்கள்
* அரச பெறுகைகள்
* களஞ்சிய முகாமைத்துவம் மற்றும் காகிதாதிகள் முகாமைத்துவம்
* மொழித்திறன்
* சுகாதாரம் மற்றும் ஆரோக்கியம்/ மன அழுத்த முகாமைத்துவம்/ வாழ்க்கையைச் சமநிலைப்படுத்தல்/ உணவுப் பண்பாடு

- இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகத்தினால் ஆறு நாட்களுக்கான வதிவிட நிகழ்ச்சித்திட்டமொன்றாக 53 நிர்வாகத்தர கிராம சேவை உத்தியோகத்தர்களுக்கான செயல்விளக்க பயிற்சி நிகழ்ச்சித்திட்டமொன்று நடாத்தப்பட்டது. நாளாந்த தொழிற்பாட்டிற்கு மிகவும் முக்கியமானதாக அடையாளங்காணப்பட்டுள்ள விடயங்களை உள்ளடக்கிய நிகழ்ச்சித்திட்டங்களில் பிரதான பகுதியாக உள்ளடக்கப்படுகின்றது.

* தலைமைத்துவம் மற்றும் ஊக்குவித்தல்
* தேசிய கொள்கையை வழங்குதல் மற்றும் பிரதேச மட்ட நிகழ்ச்சித்திட்டங்களில் இணைந்து பங்குபற்றுதல்
* அடிப்படைத் தன்னியக்க விண்ணப்பங்கள்
* பிரசைகளை மையப்படுத்திய நிர்வாகத்திற்கான அரசாங்கத்தின் கவனம்
* நேர்மறை அணுகுமுறை
* அடிப்படை அலுவலக தொழிற்பாடு
* அரச துறையில் ஒழுக்க முகாமைத்துவம்
* நிதி ஒழுங்குவிதி

- வடிவமைப்பு, விருத்தி, செயற்பாடு மற்றும் விநியோகம் ஆகிய இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகத்தின் 4 பாடவிதானங்களின் அடிப்படையில் இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகத்தின் பீட மற்றும் முகாமைத்துவம் நாடளாவிய சேவைகளின் திறன்களைக் கட்டியெழுப்புதல் நிகழ்ச்சித்திட்டத்திற்கான புதிய பாடவிதானம் மற்றும் கலைத்திட்டங்களை ஒன்றாக விருத்திசெய்திருந்தது. தரம் ஜை மட்டத்திற்குரிய உத்தியோகத்தர்களுக்கான தரம் I மற்றும் விசேட தரம். இந் நோய்த் தொற்று சூழ்நிலையில் அறிமுகப்படுத்தப்பட்ட சமூக இடைவெளி கருத்தைப் பராமரிப்பதற்காக கொழும்பிற்கு அவர்களை வரவழைப்பதை விட அதிகளவிலான நிகழ்ச்சித்திட்டங்கள் நிகழ்நிலையூடாக நடாத்தப்பட்டது.

- அதேநேரத்தில் இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகம் தொழிற்படாதிருந்த போது சுத்திகரிப்புச் சேவை ஊழியர்கள் வேலைவாய்ப்பின்றியிருந்தமையினால் அனைத்துப் பதவணி உறுப்பினர்களாலும் நிதியளிக்கப்பட்டு தன்னிச்சையான பங்களிப்பின் மூலம் அவர்களுக்கு உதவுவதற்கு மேற்கொண்ட நடவடிக்கைகளையும் அதன் சமூகப் பொறுப்புக்களையும் இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகம் மறந்துவிடாது.

இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகம் தமது தாய் மண்ணில் கொவிட் 19 பரவுவதைக் கட்டுப்படுத்தும் பொருட்டு கடுமையான சுகாதார வழிகாட்டலைப் பின்பற்றுவதற்கு தனது பிரதான கவனத்தைச் செலுத்தியிருந்த போதிலும் தனது பசுமைச் சூழலை பராமரிப்பதற்குத் தொடங்கியிருந்தது.









07. இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகத்தின் பணிப்பாளர் நாயகப் பதவி

இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகத்தின் பதில் பணிப்பாளர் நாயகமாக நியமிக்கப்பட்ட இலங்கை நிருவாக சேவையின் விசேட தர உத்தியோகத்தர் திருமதி. கே. எம். எஸ். டி. ஜயசேகர அவர்கள் பெண்கள் மற்றும் சிறுவர் அபிவிருத்தி, முன்பள்ளி மற்றும் ஆரம்ப கல்வி, பாடசாலை உட்கட்டமைப்பு மற்றும் கல்விச் சேவை இராஜாங்க அமைச்சின் செயலாளராக 2020 ஓகஸ்ட் 25 ஆம் திகதியிலிருந்து செயல்வலுப் பெறும் வகையில் அதிமேதகு சனாதிபதி கோட்டபாய ராஜபக்ச அவர்களால் நியமிக்கப்பட்டார்.

இலங்கை நிருவாக சேவையின் விசேட தர உத்தியோகத்தர் திருமதி. பிரதீபா சேரசிங்க அவர்கள் பகிரங்க சேவை, மாகாண சபை மற்றும் உள்ளூராட்சி அரசாங்க அமைச்சின் மேலதிகச் செயலாளராக இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகத்தின் பணிப்பாளர் நாயகப் பதவி வெற்றிடத்திற்கு பதில் நியமன அடிப்படையில் நியமிக்கப்பட்டிருந்தார்.



08. “நாட்டிற்காகச் சேவையாற்றும் கலாசாரம்” பற்றிய சிறப்பு விரிவுரை

பட்டப்பின் படிப்பு கற்கைகள் கல்லூரி “நாட்டிற்காக சேவையாற்றும் கலாசாரம்’ பற்றிய பொது விரிவுரையொன்று 2020 செப்டம்பர் 03 ஆம் 05 ஆம் திகதிகளில் சன்கதானி மண்டபத்தில் ஒழுங்குசெய்யப்பட்டிருந்தது. ஸ்ரீளு இனால் 2020 ஆம் ஆண்டு காலப்பகுதியில் நடாத்தப்பட வேண்டி திட்டமிடப்பட்டிருந்த விரிவுரைகள் தொடரில் 4 ஆவது விரிவுரையாகும். கொழும்பு பங்கலைக்கழக பேராசிரியர் (கலாநிதி) டி. ஏ. சி. சில்வா அவர்களினால் இவ் விரிவுரை நடாத்தப்பட்டிருந்தது.



09. இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகத்தின் பசுமைத் தோட்டத்தில் மூலிகை மருத்துவச் செடிகளை நடுவதற்கு “சுவ தரணி” எனும் தேசிய நிகழ்ச்சித்திட்டமொன்றில் இலங்கை அபிவிருத்தி நி□வாக நிறுவகம் இணைந்திருந்தது

சுகாதாரம், போசாக்கு மற்றும் சுதேச வைத்திய நடவடிக்கை அமைச்சின் “சுவ தரணி” தேசிய நிகழ்ச்சித்திட்டத்திற்குச் சமனாக “மூலிகை வைத்திய தினம்” ஒத்திருப்பதற்கு இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகம் அதன் பசுமைத் தோட்டத்தில் 2020 செப்டம்பர் 17 ஆம் திகதி மூலிகை மரங்களின் நடுகை ஆரம்பிக்கப்பட்டது.

இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகத்தின் பணிப்பாளர் நாயகம் (பதில்) திருமதி. பிரதீபா சேரசிங்க கல்வி சார் ஊழியர்கள் மற்றும் முகாமைத்துவ ஊழியர்களுடன் இணைந்து இந்த நிகழ்வில் பங்குபற்றியிருந்தார். அதிக மருத்துவ குணங்கள் கொண்ட செம்பருத்தி இனங்கள் மற்றும் இஞ்சிக் கிழங்குகள் அவர்களால் நடப்பட்டது. இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகத்தின் நிர்வாகப் பிரிவினால் இது ஒழுங்குப்டுத்தப்பட்டது. நகரப் பசுமையாக்கம் மற்றும் மருத்துவ இனங்களை நடல் என வாதிடப்படுகின்ற அதிமேதகு சனாதிபதி அவர்களின் “சுபாயா டிக்ம” கொள்கைக் கூற்றுடன் இந்த நிகழ்வு தொடர்புபட்டது.



14. கணக்காய்வுக் குழுவின் அறிக்கை

தற்போது மூன்று உறுப்பினர்களை உள்ளடக்கியுள்ள கணக்காய்வுக குழு PED/12 ஆம் இலக்க 7.4.1 ஆம் பந்தியின் ஏற்பாடுகளின் நியதிகளுக்கிணங்க போதிய உள்ளக கட்டுப்பாடு மற்றும் இடர் முகாமைத்துவம் ஆகியவற்றுடன் இந் நிறுவனத்தின் ஒருங்கிணைப்பினை உறுதிசெய்வதற்கு நிதி அறிக்கையிடற் செயன்முறையில் கணக்கீட்டுத் தரநிலைகளுடன் காலத்திற்குரிய தரமான தொகுக்கப்பட்ட நிதிக்கூற்றுடன் இணைந்து ஆளும் பேரவைக்கு அதன் அலுவல்களில் உதவுகின்றது.

கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு சேர்க்கை மற்றும் கூட்டங்கள்

2020 ஆம் ஆண்டிற்கான ஆளும் பேரவையினால் நியமிக்கப்பட்ட கணக்காய்வுக் குழுவின் உறுப்பினர்கள் பின்வருமாறு:

- திரு. பி. அளகம — திறைசேரியின் பிரதிச் செயலாளர், நிதி அமைச்சு
- திரு. சுமித் அபேயசிங்க — ஆளும் பேரவை உறுப்பினர், இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகம்
- திரு. கவுசால் மென்டிஸ் — ஆளும் பேரவை உறுப்பினர், இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகம்
- திரு. ஆர். ஜி. பண்டித கொரலாகே — ஆளும் பேரவை உறுப்பினர், இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகம்

உள்ளகக் கணக்காய்வாளர் 2020 திசம்பர் 31 ஆம் திகதி முடிவடைந்த ஆண்டிற்கான இக் குழுவின் செயலாளராக தொழிற்பட்டார். இவ் ஆண்டில் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்கள் இரண்டு நடைபெற்றுள்ளன. கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்கள் அரசாங்க மாற்றங்கள் அத்துடன் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவின் உறுப்பினர்களை பெயர் குறிப்பதில் தாமதங்கள் ஆகியவற்றின் காரணமாக அட்டவணைப்படுத்தப்பட்டதைப் போன்று நடைபெறவில்லை. கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு உறுப்பினர்கள் ஆளும் பேரவைக் கூட்டத்தில் 2020.09.10 ஆம் திகதி நியமிக்கப்பட்டனர். கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு உறுப்பினர்களின் நியமனத்தின் பின்னர் 3 ஆம் மற்றும் 4 ஆம் காலாண்டுக் கூட்டங்கள் நடைபெற்றன. 2020 ஆம் ஆண்டு காலப்பகுதியில் கணக்காய்வுக் குழுவினால் நிகழ்ச்சி நிரலின் பிரதான விடயம் பின்வருவனவற்றை உள்ளடக்கியதாக கலந்துரையாடப்பட்டது.

கூட்ட இல. மற்றும் திகதி	கலந்துரையாடப்பட்ட விடயம்
2020/01 - 27.10.2020	• இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகத்தின் வரவு செலவுத் திட்டம் 2021
	• இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகத்தின் பெறுகைத் திட்டம் 2021
	• நியதிச் சட்டக் கடப்பாடுகளின் தரநிலை
	• 2018/2019 வெளியக கணக்காய்வு ஐய வினாக்கள் மற்றும் பதில்கள்
2020/02 - 15.12.2020	• உள்ளகக் கணக்காய்வுத் திட்டம் 2021
	• 2018/2019/2020 உள்ளகக் கணக்காய்வு அறிக்கை மற்றும் கவனஞ்செலுத்தப்பட்ட பிரச்சினைகள்

கணக்காய்வார் தலைமையதிபதி திணைக்கள பிரதிநிதியொருவரான கணக்காய்வுக் கண்காணிப்பாளர் திருமதி.ஃ. செல்வி எம். ஆர். ஆர் கே. மல்லாவ அவதானிப்பளராகப் பங்குபற்றியிருந்தார். அதற்கு மேலதிகமாக இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகத்தின் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் கூட்டத்தில் பொது நிருவாக மற்றும் முகாமைத்துவ அமைச்சின் பிரதம உள்ளக கணக்காய்வாளர் அவதானிப்பாளர் ஒருவராகவும் பங்குபற்றியிருந்தார். பணிப்பாளர் நாயகம் மற்றும் சிரேஸ்ட முகாமைத்துவம் குறிப்பிட்ட சில விடயங்களில் கணக்காய்வுக் குழுவினை நம்பும் பொருட்டு காலத்திற்குக் காலம் வரவழைக்கப்பட்டது.

குறிப்பு நியதிகள்

இக் குழு PED 55 ஆம் இலக்க தொழில்முயற்சியாளர்கள் சுற்றுநிருபத்தின் நியதிகளின் பிரகாரம் ஆளும் பேரவைக் குழுவினால் குறிப்பிடப்பட்ட குறிப்பின் குறிப்பான நியதிகளின் மூலம் ஆளப்படுகின்றது. குறிப்பின் நியதிகள் மற்றும் அரசாங்கத்தின் தேவைப்பாடுகளின் பிரகாரம் தனது பொறுப்புக்களை ஆற்றுவதில் பின்வரும் குறிக்கோள்கள் மீது இக் குழு கவனஞ்செலுத்துகின்றது.

அ. உள்ளகக் கணக்காய்வுப் பிரிவின் பொறுப்புக்கள் பற்றிய தீர்மானம் மற்றும் வருடாந்த கணக்காய்வுத் திட்டங்கள் பற்றிய மீளாய்வு

ஆ. நிறுவனத்தின் அனைத்துச் செயற்பாடுகளுக்கான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமைகளை மீளாய்வு செய்து மதிப்பிடல்

இ. பெறுமதியின் விளைதிறனிற்காக முறையான இடைவெளியில் செயற்திறனை மீளாய்வு செய்து வீண் செலவீனங்கள் போன்றவற்றை நீக்குதல்

ஈ. வெளியக கணக்காய்வாளர்கள் ஒத்தியல்புடன் செயலாற்றுதல் மற்றும் கணக்காய்வாளர் நாயகத்தின்/ வெளியகக் கணக்காய்வாளர்களின் முகாமைத்துவக் கடிதங்களைப் பின்பற்றுதல்

உ. நியதிச் சட்டங்கள், ஒழுங்குவிதிகள், விதிகள் மற்றும் சுற்றுநிருபங்கள் தொகுக்கப்பட்டுள்ளனவா என்பதை உறுதிசெய்தல்

ஊ. கணக்கியற் தரநிலையுடனான இணக்கத்தை உறுதிசெய்வதற்கு நிதிக் கூற்றுக்களை மீளாய்வு செய்தல்

எ. நிவாரணச் செயற்பாடுகளுக்காக உள்ளக கணக்காய்வு/ வெளியகக் கணக்காய்வு அறிக்கைகள் மற்றும் முகாமைத்துவக் கடிதங்களை மீளாய்வு செய்தல்

ஏ. பரிந்துரைகளின் அமுலாக்கம்/ அரச தொழில்முயற்சியாளர்கள் பற்றிய குழுவின் பணிப்புக்களை மீளாய்வு செய்தல்

ஐ. இக் குழு கவனத்திற்கொள்ள வேண்டிய, நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டிய அல்லது விருத்தி செய்யப்பட வேண்டிய அடையாளங்காணப்பட்ட ஏதேனும் விடயங்களை ஆளும் பேரவைக்கு அறிக்கையிடல்

ஒ. வருடாந்த அறிக்கையில் உள்ளடக்கப்படவேண்டியவற்றுக்கான இக் குழுவினால் கண்டறியப்பட்டன பற்றி அறிக்கை தயாரித்தல்

நிதி அறிக்கையிடல்

நலன்புரித்தாளர்களினால் வழங்கப்படுகின்ற தகவலின் நம்பகத்தன்மையை உறுதிசெய்வதற்கு இக் குழு தயாராகவுள்ள நிதிக் அறிக்கையிடல் முறைமையின் விளைதிறனை மீளாய்வு செய்கின்றது. கணக்கியல் புத்தகங்கள் மற்றும் இலங்கை கணக்கியல் தரநிலைகள் ஆகியவற்றின் பிரகாரம் உண்மையானதும் நியாயமானதுமான நிதிக் கூற்றுக்களைத் தயாரிப்பதற்கான தங்களது பொறுப்புக்களை ஆற்றுவதற்கு ஆளும் பேரவைக்கு இக் குழு உதவுகின்றது. கணக்கியல் புத்தகங்களில் துல்லியமாகவும் முழுமையாகவும் பதிவுசெய்யப்பட்டுள்ள அனைத்துக் கொடுக்கல் வாங்கல்களின் நியாயமான உறுதிப்பாட்டினை வழங்குவதற்கு உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமை மற்றும் நடவடிக்கைகளின போதியதான மற்றும் விளைதிறன்களை இக் குழு மீளாய்வு செய்கின்றது.

நிதிக் கூற்றுக்களைத் தயாரிப்பதில் மேற்கொள்ளப்பட்ட முக்கிய எடுகோள்கள் மற்றும் தீர்ப்புக்களை உள்ளடக்கிய ஒத்துழைக்கின்ற தகவலுடன் இணைந்து காலாண்டுக்கான கணக்காய்வின்றிய இடைக்கால நிதிக்கூற்றுக்கள் மற்றும் நிதிக் கூற்றுக்கள் அனைத்தையும் இக் குழு மீளாய்வு செய்துள்ளது.

உள்ளகக் கட்டுப்பாடுகள்

இக் கணக்காய்வுக் குழு 2020 திசம்பர் 31 ஆம் திகதி உள்ளவாறான நிதி அறிக்கையிடலுக்கு மேலாக உள்ளகக் கட்டுப்பாட்டின் விளைதிறனை மதிப்பிடுகின்றது. சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகளுடன் இணங்கியுள்ளதை உறுதிசெய்யும் பொருட்டு கட்டுப்படுத்துகின்ற இடர்களுக்கான உள்ளகக் கட்டுப்பாடுகள் மற்றும் செயன்முறைகளின் போதியதான மற்றும் விளைதிறன்களை இச் செயன்முறை மதிப்பிடுகின்றது. இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகத்தின் உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையின் விளைதிறனை விருத்தி செய்வதற்கு உள்ளகக் கணக்காய்வாளர்களின் பரிந்துரைகளின் மீது முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட்ட துல்லியமான செயற்பாட்டினை இக் குழு உறுதிசெய்கின்றது. ஆளும் பேரவை அதன் தொழிற்பாடுகளைப் பின்பற்றி தேவையான அளவீடுகளை மேற்கொள்வதற்கு இயலச் செய்தல் உள்ளகக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் அடிப்படையாகும்.

உள்ளகக் கணக்காய்வு

உள்ளகக் கணக்காய்வுக் குழு அதன் கணக்காய்வு செயற்பாடுகளில் சுதந்திரமாகச் செயற்படுகின்றது என்பதையும் பக்கச்சார்பற்ற தொழில்வாண்மை உரிய தொழில்வாண்மைக் கவனத்துடன் செயலாற்றுகின்றது என்பதையும் இக் கணக்காய்வுக் குழு உறுதிசெய்கின்றது. இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகத்தின் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு நடவடிக்கைகளின் அளவுகோல், வளங்கள், பரப்பு மற்றும் வினைத்திறன்களை இக் குழு கண்காணித்து மீளாய்வு செய்கின்றது.

பி. அளகம
தவிசாளர்
கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு





கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை

இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகம்

2020

பணிப்பாளர் நாயகம்
இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகம்

இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவனத்தின் 2020 ஆம் ஆண்டு திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடையும் ஆண்டுக்கான நிதிக் கூற்றுகள் மற்றும் ஏனைய சட்டத்துடனான மற்றும் ஒழுங்குபடுத்தல் தேவைகள் தொடர்பாக 2018 ஆம் ஆண்டு 19 ஆம், லக்க தேசிய கணக்காய்வு சட்டத்தில் 12 ஆவது பிரிவு பிரகாரம் கணக்காய்வாளர் அதிபதி அறிக்கை

---

1. நிதிக் கூற்றுகள்

1.1 தகுதிவாய்ந்த / தகுதியுள்ள அபிப்பிராயம்

இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவனத்தின் 2020 ஆம் ஆண்டு திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் அன்றைய திகதியில் முடிவடையும் ஆண்டுக்கான காசுப்பாய்ச்சல் கூற்று, நிதிக் கூற்றுகளுக்கு ஏற்புடையதான குறிப்புகள் மற்றும் சாராம்சப்படுத்திய முக்கியமான கணக்கீட்டு கொள்கைகள் என்பவற்றைக் கொண்டமைந்துள்ள 2020 ஆம் ஆண்டு திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடையும் ஆண்டுக்கான நிதிக் கூற்றுகள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பில் 154(1) உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய, 2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டம் மற்றும் 1971 ஆம் ஆண்டில் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வுச் செய்யப்பட்டது. அரசியலமைப்பின் 154 (6) உறுப்புரை பிரகாரம் எனது அறிக்கை காலக்கிராமத்தில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும்.

எனது அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை பகுதியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களால் ஏற்படும் தாக்கத்தினைத் தவிர்த்து, நிறுவனத்தின் நிதிக் கூற்றுகளின் ஊடாக 2020 ஆம் ஆண்டு திசெம்பர் 31 ஆந் திகதியில் நிதிசார் நிலைமையினையும் அன்றைய திகதியில் முடிவடையும் ஆண்டுக்கான அதன் நிதி செயலாற்றினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

(அ) இலங்கை அரச துறை கணக்கீட்டு நியமங்கள் 01 பிரகாரம் தேவைப்படும் அல்லது அனுமதி வழங்கப்பட்டுள்ள விடத்து தவிர்ந்த சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் ஒவ்வொன்றுக்கு பதிலீடு செய்தலாகாது என்ற போதிலும், ஆற்றல் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் பொருட்டு ரூபா.2,767,628 ஆன கிடைக்கப் பெற வேண்டிய மீதியை, குறித்த நிகழ்ச்சித்திட்டத்திற்கு ஏற்புடையதாக செலுத்தப்பட வேண்டிய மீதிக்கு பதிலீடு செய்து நிதிக் கூற்றுகளில் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஆ) கடந்த ஆண்டில் மேற்கொள்கின்ற வேலைகளின் பொருட்டு செலவிடப்பட்டிருந்த ரூபா.1,644,344 ஐ மீளாய்விற்கான ஆண்டில் செலவினமாக நிதிக் கூற்றுகளில் காண்பிக்கப்பட்டிருந்ததுடன், முழுமையாக தேய்மானம் செய்திருந்த செலவினம் ரூபா. 5,815,051 ஆன சொத்துக்கள் இலங்கை தரைப்படையிடம் கையளித்தளும் பணம் வெளிச் செல்லுதலாக நிதிக் கூற்றுகளில் காண்பிக்கப்பட்டிருந்தது.

(இ) முற்று முழுதாக தேய்மானம் செய்திருந்த போதிலும் தற்போது பயன்படுத்தப்படுகின்ற செலவினம் ரூபா.171,405,969 ஆன நிலையான சொத்துக்களின் பயனுள்ள ஆயுட் காலம் அரச துறை பொது கணக்கீட்டு நியமங்கள் 03ன் பிரகாரம் மீள மதிப்பீடு செய்து நிதிக் கூற்றுகளில் காண்பிப்பதற்கு நடவடிக்கை மேற்கொண்டிருக்கவில்லை.

(ஈ) கையகப்படுத்தல் விபரங்களை குறிப்பிடப்படாத மின்னியக்க ,யந்திரங்கள் தற்போதும் பயன்பாட்டில் இருப்பினும், குறித்த இயந்திரத்தின் பெறுமதி மதிப்பிடப்பட்டு நிதிக் கூற்றுகளில் காண்பிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளவில்லை என்பதுடன், ரூபா. 400,000 ,ற்கு கொள்வனவு செய்த மீள்வைரஸ் மென்பொருள் மூலதனமயப்படுத்தாமல் மீளாய்விற்கான ஆண்டில் வருவாய் செலவினமாக வருமானத்தில் பதிவழிக்கப்பட்டிருந்தது.

(உ) மின் இயக்க இயந்திரம் பழுதுபார்ப்பதன் பொருட்டு செலுத்தப்பட வேண்டிய ரூபா. 530,532 ஆன தொகை அட்டூறு செலவினமாக கணக்கு வைக்கப்படாமையால் மீளாய்விற்கான ஆண்டின் மிகை அத் தொகையால் அதிகமாக நிதிக் கூற்றுகளில் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஊ) முகாமைத்துவ உதவியாளர் டிப்ளோமா நிகழ்ச்சித்திட்டம் பொருட்டு 2014 ஆம் ஆண்டில் ரூபா. 416,000 ஆன செலுத்தப்பட வேண்டிய மீதி சீராக்கப்படாமல் கணக்குகளில் காண்பிக்கப்பட்டிருந்தது. மேலும், 05 ஆண்டுகள் கடந்த ரூபா.7,610,160 ஆன மீதி அமைச்சிடமிருந்து கிடைக்கப்பெற வேண்டிய மீதியாக நிதிக் கூற்றுகளில் காண்பிக்கப்பட்டிருப்பினும், அவ்வாறான ஒரு மீதி செலுத்தப்படவுள்ளதென அமைச்சு அறிக்கைகளில் உறுதிப்படுத்தப்படவில்லை. அது தொடர்பான பின்னாய்வு நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படவில்லை.

(எ) அரசாங்க அலுவலர்களின் அதிகமானோர் அடங்கலாக 147 பேர்களின் பட்டநிலை பின்படிப்பு கற்கை நெறி கட்டணங்கள் மற்றும் ஆங்கில நிகழ்ச்சித்திட்டங்களின் கட்டணங்கள் என்ற வகையில் 01 ஆண்டு தொடக்கம் 05 ஆண்டு காலம் வரையிலான காலவெல்லைக்குள் ரூபா. 12,673,661 அறவிடப்பட வேண்டியிருந்தது. விண்ணப்பத்தாரிகள் கற்கைநெறிகளை பூர்த்தி செய்யாது கைவிடப்பட்டுள்ளமையால் இந்த பணத் தொகையை அறிவிடுதலானது உறுதியற்றுள்ளது.

இலங்கை கணக்காய்வு நியமம்படி (இ.க.த.நி) என்னால் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. இந்த கணக்காய்வு தரநியமம்படி எனது பொறுப்பு, இவ்வறிக்கையில் நிதிக்கூற்றுகளின் கணக்காய்வு தொடர்பில் கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பகுதியில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை வழங்கும் பொருட்டு என்னால் பெற்றுக்கொண்டுள்ள கணக்காய்வு சாட்சிகள் போதுமானதும் பொருத்தமானதெனவும் நம்புகின்றேன்.

1.3 நிறுவனத்தின் 2020 ஆம் ஆண்டு அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ள ஏனைய தகவல்கள்

இந்த கணக்காய்வு அறிக்கையில் திகதிக்கு முன்னராக நான் பெற்றுக்கொண்ட 2020 ஆண்டு அறிக்கையில் உள்ளடக்கப்பட்டிருப்பினும், நிதிக் கூற்றுகள் மற்றும் அது தொடர்பாக எனது கணக்காய்வு அறிக்கையில் உள்ளடக்கப்படாத தகவல்கள், ஏனைய தகவல்கள் என்று பொருள்படும். இந்த ஏனைய தகவல்கள் தொடர்பாக முகாமைத்துவம் பொறுப்பு கூறுதல் வேண்டும்.

நிதிக் கூற்றுகள் தொடர்பாக எனது அபிப்பிராயத்தில் ஏனைய தகவல்கள் உள்ளடக்கப்படவில்லை என்பதுடன், அது தொடர்பாக எந்தவொரு வகையிலுமான உறுதிப்படுத்தலோ அபிப்பிராயம் தெரிவித்தலோ மேற்கொள்ளவில்லை.

இந்த கணக்காய்வு அறிக்கையில் திகதிக்கு முன்னர் நான் பெற்றுக்கொண்ட ஏனைய தகவல்கள் மீது மற்றும் என்னால் மேற்கொண்ட செயற்பாடுகளை அடிப்படையாகக்கொண்டு, இந்த ஏனைய தகவல்கள் அளவு ரீதியாக தவறாக காண்பிக்கப்பட்டுள்ளதாக நான் தீர்மானித்தால், அந்த விடயத்தை என்னால் பதிவு செய்தல் அவசியமாகும். இது தொடர்பாக எதனையும் எனக்கு பதிவு செய்வதற்கில்லை.

1.4 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை ,லங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு ,ணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, நிறுவனத்தின் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது நிறுவனத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிறுவனத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உபபிரிவின் பிரகாரம், நிறுவனத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக் கூடியவாறு நிறுவனமானது அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

1.5 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்:

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை, இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும்

பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி அதிகாரசபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு நிறுவனத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு கல்வி நிறுவனத்திற்குள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியனவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் கல்வி நிறுவனத்தின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வின் போது அடையாளம் காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புகள், பிரதான உள்ளக நிருவாக குறைப்பாடுகள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக ஆளும் தரப்பினர்களை அறிவுறுத்தப்பட்டது.

ஏனைய சட்டரீதியான மற்றும் பிரமாணரீதியான தேவைப்பாடுகள் மீதான அறிக்கை

2.1 2018 ஆம் ஆண்டு 19 ஆம், இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தில் பின்வரும் தேவைகள் தொடர்பான விசேட ஏற்பாடுகள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

2.1.1 2018 ஆம் ஆண்டு 19 ஆம், இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12 (அ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைகளின் பிரகாரம், கணக்காய்விற்கு தேவையான அனைத்து தகவல்களையும் தெளிவுபடுத்தல்களையும் என்னால் பெற்றுக்கொள்ளப்பட்டதுடன், எனது பரிசோதனையில் அறிய வருகின்ற வகையில் உரிய நிதி அறிக்கைகள் நிறுவனத்தால் பேணப்பட்டிருந்தது.

2.1.2 2018 ஆம் ஆண்டு 19 ஆம், இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தில் 6(1) (ஈ) (iii) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளுடன் நிறுவனத்தின் நிதிக்கூற்றுக்கள் இணங்குகின்றன.

2.1.3 2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தில் 6(1) (ஈ) (iii) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகள் பிரகாரம், கடந்த ஆண்டில் என்னால் மேற்கொண்டு சமர்ப்பிக்கப்பட்ட பரிந்துரைகள் நிதிக் கூற்றுகளில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

2.2 மேற்கொள்ளப்பட்ட நடைமுறைகளின் அடிப்படையில் பெறப்பட்ட சான்றுகளானவை பொருண்மையான விடயங்களிற்கு மட்டுப்படுத்தப்பட்டிருந்தன. ஆனால் வேறு எதுவும் எனது கவனத்திற்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

2.2.1 2018 இன் 19 ஆம் ,லக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 12(ஈ) பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் வழமையான வணிக செயற்பாடுகளிற்கு வெளியே நிறுவனத்தினால் செய்துகொள்ளப்பட்ட ஏதேனும் ஒப்பந்தம் தொடர்பில் ஆளுகை சபை உறுப்பினர் எவராவது நேரடியாக அல்லது நேரடியாகவல்லாமல் ஏதேனும் அக்கறை கொண்டுள்ளதை குறிப்பிடுதல்.

2.2.2 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 12(ஊ) பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் நிறுவனத்தின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட ஏதேனும் ஏற்புடையற்பாலதான எழுத்தினாலான சட்டம், பொது அல்லது விசேட பணிப்புக்களுடன் நிறுவனம் இணங்கியொழுகாதுள்ளமையை குறிப்பிடுதல்.

	சட்டங்கள் விதிகள் என்பவற்றின் தொடர்	**அவதானிப்பு**
(அ)	1971 ஆம் ஆண்டு 38 ஆம் ,லக்க நிதிச் சட்டத்தின் 10 (05) பிரிவு	ஒதுக்கீட்டின் பின்னர் எஞ்சுகின்ற தேறிய வருமானம் மீளவும் திரட்டிய நிதியத்திற்கு அனுப்புதல் வேண்டுமாயினும், நிறுவனம் அதற்கு ஒழுங்கமைவாக நடவடிக்கை மேற்கொண்டிருக்கவில்லை.
(ஆ)	இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதி ஒழுங்குவிதிக் கோவை நிதி ஒழுங்குவிதி 757 (2)	மீளாய்விற்கான ஆண்டுக்காக சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுகளுடன் பொருட் மீளாய்வு அறிக்கைகள் சமர்ப்பிக்கப்படவில்லை.
(இ)	2003 ஆம் ஆண்டு யூன் 02 ஆந் திகதிய PED/12 ஆம் இலக்க அரச தொழில்முயற்சிகள் சுற்றுநிருபம் (ை) 5.1.1 பிரிவு (ை) 8.3.3 பிரிவு	எதிர்வரும் மூன்று ஆண்டுகளுக்கு குறையாத காலப் பகுதிக்காக இணைந்த திட்டம் தயாரிக்கப்படுதல் வேண்டுமாயினும், அவ்வாறான திட்டம் தயாரிக்கப்படவில்லை. ஊக்குவிப்பு கொடுப்பனவு திட்டம் தயாரிக்கப்பட்டு பொது திறைசேரியிடம் அனுமதி பெற்றுக் கொள்ளுதல் வேண்டுமாயினும், அவ்வாறு அனுமதி பெற்றுக்-கொள்ளாது, மீளாய்விற்கான ஆண்டில் ரூபா.3,202,850 ஐ நிறுவனத்தின் பணியாற்தொகுதியினரிடம் செலுத்தப் பட்டிருந்தது.
(ஈ)	1978 திசெம்பர் 19 ஆந் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரி சுற்றறிக்கை	சுற்றுநிருபம் பிரகாரம் நிலையான சொத்துக்களின் அட்டவணை ,ற்றைப்படுத்தி பேணப்படவில்லை.

(உ) 2009 நவம்பர் 13 ஆந் திகதிய 438 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையில் 05 ஆவது பந்தி 2018 மற்றும் 2019 ஆகிய ஆண்டுகளில் வருடாந்த பொருட் ஒப்பாய்வு சபையால் விற்பனை அல்லது அழித்தல் என்பவற்றுக்கு பரிந்துரைக்கப்பட்ட பொருட்களை கணக்காய்வு திகதியிலும் அகற்றப்படாது களஞ்சியங்களில் காணப்பட்டன.

2.2.3 2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க கணக்காய்வுச் சட்டத்தில் 12 (எ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம், நிறுவனத்தின் தத்துவங்கள், பணிகள் மற்றும் கடமைகளுக்கு இணங்கியொழுகி செயலாற்றப்பட்டுள்ளது என்பது,

2.2.4 2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க கணக்காய்வுச் சட்டத்தில் 12 (எ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம், வளங்கள், காலவரையறைகளினுள்ளும் ஏற்புடையற்பாலனவான சட்டங்களுக்கு இணங்கியொழுகவும் சிக்கனமாகவும், வினைத்திறனாகவும், பயனுறுதியாகவும் பெறப்பட்டுப் பயன்படுத்தப்படவில்லை என்பது,

3. ஏனைய விடயங்கள்

(அ) 2013 ஏப்ரல் 19 ஆந் திகதிய அப,/13/0237/523/001 ஆம் இலக்க அமைச்சரவை தீர்மானம் பிரகாரம் இரண்டாம் நிலைப்படுத்தல் கற்கை பணியாற்தொகுதியினரிடம் 50% ஐ இரண்டாம் நிலைபடுத்தல் கொடுப்பனவாக செலுத்தப்பட்டிருந்தது. அந்த கொடுப்பனவு மேற்கொள்வதற்காக 2014 ஆம் ஆண்டு நவம்பர் 14 ஆந் திகதிய பொது தொழில்முயற்சி செயற்குழுவின் போது, மாதாந்தம் நிறைவேற்றப்பட வேண்டிய ஆகக் குறைந்த விரிவுரைகளின் மணித்தியாலங்கள் 45 மணித்தியலாங்களுக்கு அண்மித்தல் வேண்டுமென தீர்மானிக்கப்பட்டிருந்தது. ஆயினும், அந்த தீர்மானத்திற்கு முரணாக, 2015 ஆம் ஆண்டு யூலை தொடக்கம் 2020 ஆம் ஆண்டு திசெம்பர் 31 ஆந் திகதி வரை ஆகக் குறைந்த விரிவுரை மணித்தியாலங்களின் எண்ணிக்கையினை முடிவுறுத்தாத விரிவுரையாளர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா. 9,389,325 தொகையை அறவிடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை.

(ஆ) 2008-2010 காலப் பகுதிக்குரிய பட்ட நிலை பின்படிப்பு கற்கைநெறி 2014 ஆம் ஆண்டில் பட்டமளிப்பு நடாத்தி முடிவுறுத்தப்பட்டிருந்தது. ஆயினும், இந்த பட்டப் பின்படிப்பு கற்கைநெறி பொருட்டு மீளாய்விற்கான ஆண்டில் அறிக்கை தயாரித்து சமர்ப்பிப்பதற்காக ரூபா.1,432,463 ஐ பணியாற்தொகுதியினரிடம் முறையான அனுமதியின்றி செலுத்தப்பட்டிருந்தது. இந்த கொடுப்பனவு திட்டமிடல் மற்றும் கையளிப்பு குழுவின் அனுமதியுடன் மேற்கொண்டிருப்பினும், இவ்வாறு திட்டமிடல் மற்றும் கையளிப்பு குழு மூலம் கொடுப்பனவு அங்கீகரித்தல் தொடர்பாக திறைசேரியின் அனுமதி கிடைக்கப்பெற்ற "வெளியக சேவைகளுக்கான சட்டக் கோவையில் (Rules relating to external Services)" உள்ளடக்கப்படவில்லை.

(இ) 2018 ஆம் ஆண்டில் சங்தரணி ஆராய்ச்சி நிலையம் ரூபா. 3,443,672 ஐ செலவிடப்பட்டு நவீனமயப்படுத்தியிருந்ததுடன், அதனை ஆராய்ச்சி நிலையமாக பயன்படுத்தாது நிலையம் மற்றும் ஏனைய மின் உபகரணங்களை நிறுவனத்தின் பயிற்சி நடவடிக்கைகளுக்கு பயன்படுத்தியமை காரணமாக நிலையம் தாபிக்கும் நோக்கம் நிறைவேற்றப்படவில்லை.

(ஈ) மின்னியக்க இயந்திரத்திற்கு தேவையான எரிபொருட்களை களஞ்சியப்படுத்துவதற்கு லீற்றர் 10000 ஆன ஆற்றலைக் கொண்ட எரிபொருள் தாங்கி தாபிக்கப்பட்டுள்ளதுடன், கூட்டுத்தாபனத்திடமிருந்து எரிபொருள் பெற்றுக்கொள்கையில் 6000 ம் லீற்றர் அளவினை ஒரே முறையில் பெற்றுக் கொள்ள வேண்டி ஏற்பட்டமையால், அந்த அளவு

களஞ்சியப்படுத்தப்பட்டிருந்தது. அந்த எரிபொருள் இருப்புகளிலிருந்து மேலும், 2784 லீற்றர் எஞ்சியருந்ததாக அவதானிக்கப்பட்டதுடன், வருடாந்த சராசரி செலவழிவின் படி, மேலும் 10 ஆண்டுகளுக்கு அதிகமான காலப்பகுதிக்கு அது போதுமானதென அவதானிக்கப்பட்டதுடன், தற்போது இந்த எரிபொருள் இருப்பு பயன்படுத்த இயலாத மட்டத்தில் காணப்பட்டது.

(உ) நிறுவனத்திற்குரிய 05 உத்தியோகபூர்வ இல்லங்கள் பயன்படுத்தாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(ஊ) 2013 பெப்ருவரி 07 ஆந் திகதிய 13/0150/523/005 ஆம் ,லக்க அமைச்சரவை தீர்மானம் பிரகாரம் நிறுவனம் தாபிக்கப்பட்ட சட்டம் திருத்தம் செய்வதற்கு அனுமதி வழங்கியிருப்பினும், குறித்த தீர்மானம் வழங்கப்பட்டு 07 ஆண்டுகள் முடிவுற்றிருப்பினும் அது தொடர்பாக எந்தவொரு நடவடிக்கையும் மேற்கொண்டிருக்கவில்லை.

டப்ளியு. பீ. சீ. விக்கிரமரத்ன
கணக்காய்வாளர் அதிபதி



රාජ්‍ය පරිපාලන හා කළමණාකරණය පිළිබඳ දැනුම හා කුසලතා වර්ධනය කිරීම සඳහා ශ්‍රී ලංකාවේ ප්‍රමුඛතම රාජ්‍ය අංශයේ පුහුණු ආයතනයයි. කළමනාකරණ පුහුණුවලට අමතරව කළමනාකරණ උපදේශන සේවා සැපයීම හා පර්යේෂණ කළමනාකරණයට අදාල සේවා සැපයීම මෙන්ම ආයතනික කළමනාකරණ ක්‍රමවේදයන් සමාලෝචනය හා වැඩිදියුණු කිරීම ද මෙම ආයතනයේ කාර්යභාරයට අයත් වේ. මෙය 1982 අංක 09 දරණ පාර්ලිමේන්තු පනත යටතේ පිහිටුවනු ලැබූ ආයතනයකි.

என்பது, பொது நிர்வாகம் மற்றும் முகாமைத்துவத்தில் அறிவை மேம்படுத்துவதற்கும் திறன்களை மேம்படுத்துவதற்கும், இலங்கையின் முதன்மையான பொதுத்துறை பயிற்சி நிறுவனமாகும். முகாமைத்துவ பயிற்சி நடவடிக்கைகளுக்கு மேலதிகமாக, ளுடுஜனுயு ஆனது முகாமைத்துவ ஆலோசனை சேவைகள் மற்றும் முகாமைத்துவத்தின் அடையாளம் காணக்கூடிய செயற்பாட்டுப் பகுதிகளை அபிவிருத்தி செய்வதற்கும் நிறுவன அமைப்புகளை மீளாய்வு செய்வதற்கும் மேம்படுத்துவதற்கும் மேற்கொள்ளும்.

Sri Lanka Institute of Development Administration (SLIDA) is the premier public sector training organization in Sri Lanka, for the development of knowledge and improvement of skills in Public Administration and Management. In addition to management training activities the SLIDA also undertakes Management Consultancy Services and Research to develop identifiable functional areas of management as well as review and improve organizational systems.

ශ්‍රී ලංකා සංවර්ධන පරිපාලන ආයතනය
இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகம்
Sri Lanka Institute of Development Administration

28/10 Malalasekara Mawatha, Colombo 07, Sri Lanka.
Tel: +94 (0) 115980200 Fax: +94 (0) 115898502
Email: mail@slida.lk Web: www.slida.lk

PRINTEC | 0112 815 816